32

ஸ்ரீராமஜெயம்

அருப்புக்கோட்டை புளியம்பட்டி,
நாடகாசிரியர்,
17 JUN 1932
மகா-௱-௱-ஸ்ரீ A. K. ராமசாமி நாயக்கரவர்கள்
இயற்றிய

ஸ்ரீராமாயண உத்தரகாண்டம்
ஸ்ரீராமர் அஸ்வமேதயாகம்
என்னும்

# குசலவன் சரித்திரம்.

இஃது
திருநெல்லையம்பலம் நாடகாசிரியர்,
மகா-௱-௱-ஸ்ரீ T. H. லெக்ஷுமண சேர்வை
அவர்களால் பார்வையிடப்பட்டு

அருப்புக்கோட்டை
சாரதா அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

1932 (விலை அணா 6.

0-1,892MRN,K
N32
183816

ஸ்ரீராமஜெயம்

அருப்புக்கோட்டை புளியம்பட்டி,

நாடகாசிரியர்,

மகா-ா-ா-ஸ்ரீ A. K. ராமசாமி நாயக்கரவர்கள்

இயற்றிய

## ஸ்ரீராமாயண உத்தரகாண்டம்

## ஸ்ரீராமர் அஸ்வமேதயாகம்

என்னும்

# குசலவன் சரித்திரம்.

இஃது

திருநெல்லையம்பலம் நாடகாசிரியர்,

மகா-ா-ா-ஸ்ரீ T. H. லெக்ஷ்மண சேர்வை

அவர்களால் பார்வையிடப்பட்டு

அருப்புக்கோட்டை

சாரதா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

பதிப்புரிமை
ஆசிரியருக்கே }

1932

(விலை அணா 6.

## முக்கிய நாடக பாத்திரங்கள்

| | |
|---|---|
| ஸ்ரீராமர்: லக்ஷ்மணர். பரதர், சத்துருக்கனர், | தசரத புத்திரர்கள் |
| சீதை | ராமர் பத்தினி |
| சுமந்திரர் | மந்திரி |
| குச லவன் | ராமர் புத்திரர்கள் |
| வால்மீகர் | ஓர் தபசி |
| வதிஷ்டர் | சூரியகுலகுரு |
| விபூஷணர் | இலங்காதிபதி |
| சுக்ரீவன் | கிஷ்கிந்தைக்கரசன் |
| ஆஞ்சநேயர் | ஸ்ரீராம தூதன் |
| கன்னிமார்கள் | வால்மீகியால் சிருஷ்டிக்கப்பட்ட தேவமாதர்கள் |
| மௌனசிகாமணி துன்மார்க்க சிகாமணி | ஷை சிஷ்யர்கள் |

கதை நிகழிடம் பெரும்பாலும் வனப்பிரதேசத்திலும் அயோத்தியிலும்

# முகவுரை.

வெண்பா

ஸ்ரீ ராமயாண மெனும் திவ்ய சரிதமதை
பாராயணஞ் செய்த பக்தன்—நோராக
ராமசாமி என்பவரா லியற்றும் நாடகப்பா
மாமணக்கு மெங்கு மதிக்க.

நெடியகடல் சூழ்ந்த இவ்வுலகில் தோன்றியெழும் எழுவகை தோற்றத்தில் ஆன்மகோடிகளாய் நம் மனுஷ்ய வர்க்கத்தார்க்கு எல்லாம்வல்ல இறைவனால் கொடுக்கப்பெற்ற செல்வங்கள் பலதுள் தலையுற்றிலங்குவதெதுவெனில்,

செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்
அச்செல்வம் செல்வத்துளெல்லாம் தலை என்றதிற்கிணங்க இந்நிலவுலகின்கண் பெரும்பாலோர் அதற்குக் கருவிகளாய் விளங்கும் பன்னிசை நாடகத்தமிழையே போற்றி வாழ்தல் ஒரு சான்றாகும் அதற்கு இயல் இசை நாடக மென்றமுத்தமிழும் ஒருங்கே பிணைக்காவிடில் நாடகமெனப் பெயர் அடையத்தக்கதன்று.

அங்ஙனமிருக்க தற்கால நாகரீகத்திற்கேற்றவாறு நாவல்கள் கட்டுரைக்கதைகளென அனுபோகிகள் எழுதி ஒப்பிய ஆசிரியரால் சில பாக்களமைத்து நாடகரூபமாய் நடித்துக்காட்டி வருகின்றனரென்றாலும் இந்நூல் அப்படியல்லவென யாவரும் துணிவுறக் கூறுவர்.

பூதபௌஷ்ய வர்த்தமானிகளாகிய தபசிகளால் அடுத்த யுகத்தில் நடாத்திக் காண்பிப்போம் என்று ஈஸ்வரனருட்ப்ரசாதத்தால் வெளியிடப்பட்ட இதிகாசத்தின் உண்மைச் சரிதைகளில் இதுவும் ஒன்றென்பது யாவரும் ஒப்பத்தக்கதே.

நிற்க மானிட ஜென்மமெடுத்தே முத்திநிலை அறியக்கடவதென தேவர்களின்வாக்கும் வேதத்தின் முடிவும், அவ்வாறு ஜென்மங்களின் பக்திவசப்பட்டே நிஷ்களங்க சொரூபியாகிய பகவானே தசவித அவதாரத்தைப்பெற்று துஷ்டசங்கார சிஷ்ட பரிபாலினித்தாரெனவே சுருதி மூலம் தெற்றென விளங்கும் அதனிற் அப்பெரும் நூலிற் இவ்விராமாயணம் மிகச் சிறந்ததென முதியோர்கள் தீர்க்கம்.

அஃதில் சப்தகாண்டமமைந்த உத்திர காண்டத்தை நாடகரூபமாய் இயற்றிய இந்நூலாசிரியர் நம் இயற்கை ஞானர்த்தரும் பல்லாண்டுகளாய் ஆர்மோன்ய வாத்யசுரக்யான முற்றவருமான எனதுநண்பர் அ. கூ. இராமசாமி நாயக்கரென்பவர் தனது வாழ்

நாளை நாடகத்திலேயே ஆனர்த்தித்து நடத்திவரும் அனுபவத்தைக் கொண்டு இவ்விராமயாண உத்திரகாண்ட குசலவனது சரிதையை நாடக ரூபமாக்கி தற்கால நாகரீகவர்ண மெட்டுக்களைக் கொண்டு மதுர சுவை பொருந்தும்படி காவியங்களியற்றி சொற்றொடரணை யுடன் இணைக்கப்பெற்ற தமிழ்மொழியுடன் சேர்த்து இடத்திற் குத் தக்கதாய்ப் பொலிந்து விளங்கச் செய்திருப்பது நம் தமிழ் நாட்டு நாடகச்சங்கத்தார்க்கும் மற்றும் ஏனைய (ஆக்டர்) வேடதாரி களுக்கும் பக்தமணிகளுக்கும் எளிதில் தெரிந்துகொள்ளும் பாகத் தையும் இன்றியமையாத ஆனந்தத்தையுமே இந்நூல் தருமென்று என் மனப்பூர்வமாய் சொல்லுகின்றனம்.

இங்ஙனம்,

தங்கள் விதேயன்,

T. H. லெக்ஷ்மண சேர்வை,

நாடகாசிரியர்,

திருநெல்லை அம்பலம்.

உ

## ஸ்ரீமதே ராமாநுஜாய நமஹா.

### வெண்பா.

குசலவன் சரிதமதை குவலயத்தில் நாடகமாய்
இசையுடன் சொல்ல நாவினிது பெற—திசைநோக்கி
நம்பிக்கை கொண்டார்க்கு நல்வரந்தந்தேயுதவுந்
தும்பிக்கை தேவன்றுணை.

### விநாயகர் துதி.

ஜே ஜே ஜேகண நாதா என்ற மெட்டு.

லம்போதர கஜமுக நாயக
அம்புஜ பாதா ரசித விநோதா (லம்)
அம்பிகைபாலா நம்பினேன் சீலா
ஆசையினு லென்னை யாண்டருள் மேலா
அமரர் சிங்காரா புகழுங் கெம்பீர
அடியவர் துயர் தவிர்த்திடும் சீரா
அர்ச்சிக்கும் வகையுடன்
அனுதினம் துதித்தோம்
அரிய மலர்தனையுன் பாதத்தில் குவித்தோம்
அகிலமெலடுத்தோம் அரங்கத்தே நடித்தோம்
அன்பனும் ராமசாமி அதிரசகீதம் நாம் படித்தோம் (லம்)

### சரஸ்வதி துதி

மாதாட பாரதேஞே என்ற மெட்டு.

தாயே உன் பாதங்கெதி சாரதா தேவி
சேயன் மொழிக்கிரங்கி நீயே வந்தருள் தகி தா
புஸ்தகபாணியே புலவர்கள்க்யானியே
விஸ்தாரஞானியே வித்வ கல்யாணியே
வித்தகர் துதி பக்தி பூரணி
நத்தினோர் மனச் சித்தகாரணி
சக்தி வாணியே சகலபுவனியே
பக்தன் ராமசாமிக்கருள் நீயே. தா

முதல் அங்கம்.

1-வது காக்ஷி இடம் அயோத்தி சபா மண்டபம்

பாத்திரங்கள். ஸ்ரீ ராமர் சிம்மாசனத்திருக்க பரதர், லக்ஷ்மணர், சத்துருக்கனர், விபூஷணன், சுக்கிரீபன், ஆஞ்சநேயர் வசிஷ்டர் புடை சூழ்ந்திருக்கின்றனர்.

ஸ்ரீ ராமரை துதிசெய்தல்

கந்தார்த்த தொகையரு.

அயோத்திவாழ் அரசே அண்ணலே தசரத
அவதார புத்ர ராமா
அடியவர் குறைதனை தீர்த்திடும் புண்யனே
அனந்த கல்யாண நாமா

ராமர் வசனம்.

ஆசிர் வதித்தேன் யாபேரும் அமருங்கள்.

யாபேரும் நமஸ்கரித்து அவரவர்களுடைய ஆசனத்திலமருகிறார்கள்.

ராமர் வசனம்.

தம்பிமார்காள் இவ்வயோத்தியாபுரிபட்டணத்தில் ரெவிகுலந் தழைத்தோங்க நமது தந்தையாகிய தசரத சக்ரவர்த்தி பல்லாயிரக்கணக்கான வருடங்கள் மனு நீதி தவருது

இறை காக்கும் வையக மெல்லாமவனை
முறை காக்குமுட்டாச்செயின் என்றபடி.

அரசன் உலகத்தை நீதியுடன் செங்கோல் செலுத்தி குடிகளை ஆதரிப்பானுயின் அப்பெரும் நீதியே அவனைக்காக்கு மென்றுன்ருேர் கூறியபடி மன்னுயிரையும் தன்னுயிர்போல் காப்பாற்றி வாய்மையைக் கைக் கொண்டு வந்தனர். நிற்க அதன்பின் நாமும் இது நாள் வரை அரசு புரிந்துவந்த மட்டிலும் தற்சமயம் நமது அரசியலைப்பற்றி தங்களிடம் சிற்சில விஷயங்கள் அறிய ஆவலுற்றவனுக இருக்கிறேன் என்ன தெரிவிக்கின்றீகள்?

பரதர் வசனம்

அகிலலோக சரண்யா அண்ணு தங்களது திருவாய் மலர்ந்

தெழும் சொற்களுக்கு எவ்வமயம் கீழ்படிந்து நடப்போமென்னும் எதிர் நோக்கத்துடனே நிற்கின்றோம் தம்மினது சித்தமெப்படியோ அப்படியே நாங்களும்

ராமர் பாட்டு

அதிபதிகேளும் என்றமெட்டு.

பரதனே கேளும் பாரினில் அரசர்
பணிஉடனே நடந்து
வருகிறதோது முறை தவறாது
வண்மையதனே யுகந்து பர

வசனம்

தம்பி பரதா நமது அயோத்திக்குள்பட்ட ஐம்பத்தாறு தேசத்தரசர்களும் மற்றும் குடிபடைகள் யாபேரும் நம்முடைய வார்த்தைக்கு இணங்கினவர்களாகவும் சுகக்ஷேமத்தை கைக்கொண்டவர்களாக இருக்கிறார்களா ?

பரதன் பாட்டு ஷை மெட்டு

தசரத ராமா ரெவிகுல நாமா
சாற்றிடுவேன் பூமா
இசையுகம்மாசில் திசை புகழ் கீர்த்தி
இருக்கிறதே சீமா தச

வசனம்.

கதிர் குலத்தண்ணலே தேவரீருடைய பாதார விந்தத்தை சிரமேற்கொண்டு பயபக்தியுண்டு சிற்றரசரும் உற்ற குடிகளும் சுகஜீவியாய் வாழ்ந்து வருகிறார்கள் சுவாமி.

ராமர் வசனம்

சந்தோஷம்.

பாட்டு ஷை மெட்டு

பதிபுகழ் லங்கை அதிபதி இங்கு
பகருவாய் உன்க்ஷேமம்
மதிபெரும் அரசர்கள் முறை தவறாமல்
வாழ்ந்து பணிகிறாரு நாமம் பதி

வசனம்.

விபூஷணா நாலுலக்ஷ ராஜவீதிகளும் ஒன்பதுகோடி சிவாலயம்களும் அமையப்பட்ட இலங்காபுரி அரசே ! உன்னுடைய அரசியலுக்குள்பட்ட சிற்றரசர்கள்முதல் சர்வ ஆத்மகோடிகளின் க்ஷேமமும் பக்தியும் எப்படி ?

விபூஷணன் பாட்டு. ஷை மெட்டு.

மூர்த்தியே கேளும் கீர்த்திசேர் லங்கை
பூர்த்தியாய் அரசர்களும்
நேர்த்தியோடு நம் கீர்த்தி கொண்டாடுறார்
நிற்மலனே மகிழும்.

வசனம்.

திருமகள் மார்பா! தெரிவிக்கிறேன் தங்களுடைய கிருபா கடாக்ஷத்தால் தன்னுயிரைப்போல் மன்னுயிரையும் கார்த்து வருகிறேன் .அவ்வகையில் சிற்றரசர்கள் பயபக்தியுடனும் குடிகள் நல்வாழ்வுடனும் ஆனந்திக்கிறார்கள் பிரபு.

ராமர் வசனம்.

சந்தோஷம்.

பாட்டு ஷை மெட்டு.

வானர வீரா வழுத்து முன்னாட்டிற்
வளமதனை நேராய்
ஈனமில்லாமல் க்ஷேமமாய் குடிகள்
இருக்கிறாரா சீராய்.

வசனம்.

அங்கதா! கிஷ்கிந்தாபுரியில் உன்னுடைய கீர்த்திப்ரதாபத்தை நிலைநாட்டி குடிகளெல்லாம் மகிழும்படி செய்வித்து மனுநீதி தவராது க்ஷேமத்தைநாடி வருகின்றனையா?

அங்கதன் பாட்டு ஷை மெட்டு

தீனதயாளா சீதை மணாளா
தெரிவிக்கிறேன் கேளாய்
வானரவீரர் மகிழுடன் உங்கள்
மலர்ப்பதம் தொழுகிறாரே நாளாய்.

வசனம்.

கருணையங்கடலே! கிஷ்கிந்தாபுரியில் சகலபிரஜைகளும் தங்களுடைய அருளை இடைவிடாது ஸ்மரணை பண்ணிக் கொண்டு க்ஷேமமுற்று வாழ்வுபெற்று வருகிறார்கள் சுவாமி என் வகையில் சிறிதும் ஆலோசனை வேண்டாம்.

ராமர் வசனம்.

மெச்சினேன் நம்மைச்சார்ந்த ஒவ்வொருவருடைய க்ஷேம லாபங்களைப்பற்றி மகிழ்ச்சி கொண்டேன்

பரதர் வசனம்.

அண்ணா அடியேனது ஓர்விண்ணப்பம் (அடுத்ததுகாட்டும் பளிங்கு போல் நெஞ்சங்கடுத்தது காட்டு முகம்) என்றபடி கோடிசூரிய உதயப் பிரகாசம்போன்ற தேவரீரது முகாரவிந்தம் இன்று எக் காரணத்தாலோ மக்ன திசையை அடைந்து விளங்குவதன் விஷயத்தை இச்சிறுவர்களாகிய எங்களுக்குச் சொல்லாது தாமே சிந்தித்திருக்க தர்மமோ அண்ணா கிருபை கூர்ந்து அதனை நாங்கள் அறியச்செய்புங்கள்.

ராமர் வசனம்

என்னருந் தம்பிமார்காள்! நீங்கள் சந்தேகித்ததும் உண்மையே. அதனை நான் நினைக்கும்பொழுது எனதுள்ளம் திடீரென திகைப்பும் சித்த பிரமையும் அடைகிறது. ஆனாலதனை நமது குருவாய் விளங்கும் வதிஷ்டமகரிஷியாரிடமே தெரிவித்து அதனது பலனைத் தெரியலாமென நினைத்திருக்கிறேன். அதன் மத்தியில் நீங்களே முதன்மையாக அறிய விரும்புவதால் அவ்விஷயத்தைச் சொல்லுகிறேன். விபூஷணா சுக்ரீபா தம்பிமார்காள் கேளுங்கள்.

சகலரும் வசனம்.

சுவாமி பக்தியாய் கேட்கிறோம்.

ராமர் வசனம்.

தம்பி லக்ஷமணா நேற்று இரவு நான் ஏகாந்தமாய் நித்திரையிலயர்ந்தபோது

பாட்டு. நாரதரே என்ற மெட்டு.

கண்ட கனவதை கழருவேன் அதனின்
காரணம் உரைப்பாய் தம்பி லக்ஷமணா.

லக்ஷமணர் பாட்டு.

தண்டுழ மார்பனே தசரத ராமனே
தாமதமிலா துரைப்பீர் அதனை.

ராமர் தோகையரு.

வண்டணி சீதையற்கு மாதம் ஐந்து மகிழுடன்
கர்ப்பமென்று

கண்டது மன்றி கானகம் புகுதலும்
காட்சியிதாகுமின்று

பாட்டு தொடர்.

விண்டேனே இதனின் வினையது தோணேன்
விளம்பிடுவாய் தம்பி லக்ஷமணா.

வசனம்.

அப்பா கண்மணி சீதை ஐந்து மாத முள்ள கெர்ப்ப வதியாய் இருக்கவும் அன்னவளை காட்டிற் சென்று வசிக்கவும் அவள் பெற்ற இருகுழந்தைகளால் நாமனைவரும் மடிவதும் ஒரு மகரிஷி அனுக்கிரகத்தால் மீண்டுமுயிர் பெறுவதாகக்கண்டேன் தம்பிமார்காள் இதனாலென்ன தீமைவிளையப் போகிறதோ தெரியவில்லையே ஹா! என்சித்தநிலை தடுமாறுகிறது சீக்கிறமாக நமது குரு வசிஷ்ட பெருமானை அழைத்துவரக் கட்டளை யிடு.

லக்ஷுமணர் வசனம்.

அண்ணா! தங்களது கனவால் தோன்றிய விஷயங்கள் ஒவ்வொன்றும் கேட்க பெரும் வியப்பையும் ஆறுத் துயரத்தையுமே தருகிறதே தவிற கிஞ்சிற்றும் மனதை தேற்றிக்கொள்ள வழி கொடாதிருக்கிறது. அதற்குற்ற பலனையும் நாம் ஆற்றலடையும் சக்தியையும் தர வல்லார், நமது குரு வசிஷ்டமுனிவரொருவரே ஆதலால் தேவரீரது சொற்படியே அழைத்துவர உத்திரவு பிறப்பிக்கிறேன். யாரடா துவாரத்தின்கண்?

மாதலி வசனம்.

பிரபு நமஸ்கரிக்கின்றேன்.

லக்ஷுமணர் வசனம்.

அடே நமது குலகுருவாகிய வசிஷ்டமகாமுனிவரை ராம பிரான் அழைத்ததாக அழைத்துவா சீக்கிரம்.

வசிஷ்டர் பிரவேசம்.

பாட்டு. சோமசுந்தரனே என்ற மெட்டு.

ராமா பாதங்கதி நின்னை
நாளுந் துதிக்க நீதியருள் ததி (ராமா)

சேஷசயன வாசனே தேவர்
நேசனே அன்பர் ஈசனே
கோசலை புதல்வா உன்னை
கோரி னேனே நேரில் நானே (ராமா)

சீதை மணவாளனே தினம்
சேவித்தேன் ரெகுநாதனே
வாதையான ஏழைகள் மீது
வர்மஞ் செய்ய தர்ம மேது (ராமா)

வசனம்.

யாரடா காவலன் ராமச்சந்திரன் மற்று முள்ளவர்களுடைய சமுகம் எவ்வாறு சீக்கிரம் நான் வந்ததாகத் தெரிவி.

மாதலி வசனம்.

சுவாமி தங்களுடைய வருகையை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள் செல்லலாம் சுவாமி.

ராமர் முன்னுரை விருத்தம்.

வேதங்களுணர்ந்த ஞான வித்தகா போற்றி போற்றி
நாதங்கள் சூழியரிந்த நாயகா போற்றி போற்றி
பாதங்கள் பணிந்தோமிந்த பண்மணி ஆசனத்தில்
மாதவ வதிஷ்டரே நீர் மகிழுடன் இருந்திடீரே

வசனம்.

மகா தபோநிதியாகிய குலகுருவே இந்த ஆசனத்தமரவேண்டும் சுவாமி

வதிஷ்டர் வசனம்.

பூமகள் மார்பா யாபேரும் க்ஷேமந்தானே

ராமர் வசனம்

எங்கள் திருவே நாங்களனைவரும் க்ஷேமமாய் இருக்கின்றோம்.

வதிஷ்டர் வசனம்.

சந்தோஷம் ஆனல் ராமச்சந்திரா எப்பொழுதுமில்லாத துரித காரியத்தோடு நீ அழைத்ததாக கேள்வியுற்று வேகமாய் இங்குற்றேன் நானினைத்த பல சந்தேகத்தை நிகர்த்தே உனது சமுகம் விளங்குகிறது. தம்பிமார்களும், மற்றவர்களும் கவலைக் கடலில் ஆழ்ந்தவர்களாய் காணப்படுகிறார்கள். இச்சடாமண்டபம் இருள் பொலிந்தாப்போல் தோற்றுகிறது காரணம் என்ன சீக்கிரம் சொல் நான் அறிதற்கு.

ராமர் வசனம்.

(பெருமூச்செரிந்து) சுவாமி தெரிவிக்கின்றேன் நேற்று இரவு நான் தனியனாக அயர்ந்து துயிலுங்கால் ஒரு சொற்பனம் கண்டேன் அதனை செவியேற்று அதற்குற்றபலனை தேவரீரது திருவாய் மலர்ந்தருள வேண்டுகிறேன் குருவே.

பாட்டு ஞானபண்டித மோதிலால் என்ற மெட்டு.

ஞான விவேக முனியே நவில்வேனினியே ஞான
ஆனதோர் சிதையர்க்கு அருளினல் கெர்பமென்று
கானகமே புகுந்தாள் கஷ்டமுங்கொண்டாள்

தொகையரு

தேவர்கள் துதித்திடும் மாதவத்தோர் இரு
தெய்வப்பெண்ணுதவி பெறவும்

மாதவள் வயிற்றிலிருபாலர்கள் ஜெனித்துமே
வந்து நமை அளித்துவிடவும்

பாட்டு துடர்

வால்மீகர் உதவியால் மகிழ்ந்து சீதையுடனே
வாகுடனயோத்தி வந்தோம் மனதுகந்தோம் ஞான

வசனம்

தேவ தேவே என்னரும் ஜானகி ஐந்து மாதம் கெர்ப்பவதியாயிருக்கவும் தம்பி லக்ஷுமணனால் அச்சீதாமதியை காடு கடத்தபட்டு தண்ட காருண்ய தபோ வனத்தில் கொண்டு போய்விட்டு வந்த தாயும் சீதையானவள் யாதா மொருகதியுமின்றி நடுவனத்தில் நின்று பரிதவிக்கவும் அதன் பின்பு தவயோகி வால்மீகியால் இரு தெய்வப்பெண்களை ஆதரவு கொடுத்து காக்கப்பட்டு வருந்தருணத்தில் சீதையானவள் இரண்டு மைந்தர்களைப் பெறவும் அம்மைந்தர்களால் நமது சேனை சைன்யங்களெல்லாம் அழிவுற்று நாசமடையவும் அதற்கு பின் சீதாதேவியுடன் அயோத்தி வந்து அகமகிழவும் இப்பேர்ப்பட்ட அபசகுனங்களான கனவு கண்டேன் இதன் விபரம் தெளிவுற தெரிவிக்க வேண்டும் சுவாமி

வசிஷ்டர் வசனம்.

ராமச்சந்திரா தெரிவிக்கிறேன் கேட்பாய் நல்லோர்கள் சொற்பனம் கல்லின் மேலெழுத்து என்று கூறுவார் ஆகையால் வாஸ்தவத்தில் இக்காரியம் நடந்தே தீருமென்று நினைக்க வேண்டும் ஆனால் உன் தம்பியாகிய லக்ஷுமணரை அந்தப்புரம் சென்று உன் தாயாரிடம் உண்மையை விசாரித்து வரும்படி செய் சீக்கிரம்.

ராமர் வசனம்.

அப்படியே தேவரீருடைய உத்திரவுபோல் விசாரித்து வரச் செய்கிறேன். தம்பிலக்ஷுமணா நீ அந்தப்புரம்சென்று நமது அன்னையாரிடம் சீதா தேவிக்கு கெர்பமுண்டா யிருப்பது உண்மையா வென்று தெரிந்துவா சீக்கிரம்.

லக்ஷுமணர் வசனம்.

உத்திரவுபோல் விசாரித்து வருகிறேன் அண்ணா.
(விசாரித்து வந்து உடனே பதில் சொல்லல்.)

அண்ணா நான் அந்தப்புரம் சென்று விசாரித்த மட்டிலும் உண்மை யென்றே விளம்புகிறார்கள்.

ராமர் வசனம்

குருநாதா தங்களுடைய வாக்கின் பிரகாரம் சீதாதேவிக்குக் கர்பமுண்டா யிருப்பதுஉண்மையே.

வதிஷ்டர் வசனம்

மகா பாக்யம் ராமச்சந்தரா இதுகால்வரை புத்திரப்பேற்றை யடையாது இப்பொழுதாகிலும் கிடைத்ததுபற்றி நான் சந்தோஷப்படுகிறேன் இந்துமாதமாய் இருப்பதால் ஓர்முகூர்த்தம் நடத்தி வைக்கவேண்டியது அவசியம் ஆகையால் சீக்கிரம் சீதையை அழைத்துக்கொண்டு வாருங்கள்.

ராமர் வசனம்.

லக்ஷ்மணா அந்தப்புரம் சென்று சீதையை அழைத்துவா சீக்கிரம்.

லட்சுமணர் வசனம்.

அப்படியே சென்று வருகிறேன்.

சீதை பிரவேசம்.

இராகம் பூரிகல்யாணி. தாளம் ஆதி.

பல்லவி.

கருணாபூரி கல்யாணிதாரி — கரு

அனுபல்லவி.

வரநாயகா மாது உம்மைக்கோரி
வந்தேனே ஹரி எந்தனை ஆதரி — கரு

சரணம்

கச்சைத தாய் குரு தாசருக்கு யாரு
சொந்தமாய் துதிக்க சொல்லு வீரச்சீரு
எந்தநேரமும் உந்தனையே நாட
சந்ததமும் ராமசாமி பதம்பாட — கரு

வசனம்

சுவாமி அடியாள் நமஸ்காரம். குலகுருவே, குழந்தை என் நமஸ்காரம். (எல்லோரும் ஆசீர்வதிக்கிறார்கள்.)

சுவாமி அடியாள் அந்தப்புரத்தி லிருக்கும்பொழுது என்னை அழைத்த காரணம் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ராமர் வசனம்.

எனதாருயிர் காதலி நீ கெற்பமாயிருப்பது தெரிந்து மிகவும் சந்தோஷங் கொண்டோம். அதற்காக எமது குருநாதன் இன்று சுபதினமாகையால் உனக்கு ஓர்முகூர்த்தம் நடத்தவேண்டுமென்று அழைத்துவரக் கட்டளை யிட்டபடியால் இங்கு நீ வர நேர்ந்தது.

### சீதை வசனம்.

சுவாமி அடியாள் செய்த பாக்யம்.

ஓமயெக்யத்தோடு முகூர்த்தம் நடந்தேறுகிறது பின்பு ஒவ்வொருவரும் எதாஸ்தானம் செல்கின்றனர்.

### வதிஷ்டர் வசனம்.

ராமச்சந்தரா முகூர்த்தம் செவ்வெண நடைபெற்று முடிந்தது மற்றுமுள்ள காரியங்கள் நடைபெறுவதும் கூடிய சீக்கிரமே ஆதலால் ரெகுபதியான நினது மனம் சபலமடையா திருக்கட்டும். நானும் அடிக்கடி கவனிக்கிறேன். சென்றுவருகிறேன்.

(காக்ஷி முடிவு)

## 2-வது காக்ஷி இடம் பளிங்குமண்டபம்.

பாத்திரங்கள்—ராமர் சீதையிடம் விஷயம்தெரிதல்

### ராமர் வசனம்.

என் அன்பிற் கழத்தி உலகத்தினிடத்தே கெற்பமுடைய பெண்களுக்கு அநேக வித இச்சைகள் எற்படுமென்று தெரிவிப்பார்கள் ஆனல் உனக்கு அப்படி எவ்வகையிலேனும் ஆசை யிருங்கலாமென்று நான் நினைக்கிறேன் உனது அபீஷ்டத்தை தெரிவிப்பாய் கண்மணி

பாட்டு ராட்டினமே காந்திகைபாணம் என்ற மெட்டு ஜாயிண்டு.

நாட்டமெது சீகாரஞ்சனமே என்முன்
நவில்வாயடி சொர்னமே அதிலாவண்யமே நா

சீதை தாட்டிகமாக முன் சென்ற தபோவனம்
தங்கியிருந்த ஜீவனம் சதா கவனம் தா

ராமர் மேட்டிமையார் வன வேடிக்கை பார்ப்பதை
வெறுப்பாரது சோபமே நீ விரும்புதல்
வித்யாச மாந்தாபமே மேலதான நா

சீதை காட்டினி லெட்டிடக்காணும் பஞ்சவடி
காக்ஷிநேர் கண்டதின்படி என் நெஞ்சத்தில்
காதலாரு தடிக்கடி காரும் நீயே தா

### ராமர் வசனம்.

கண்மணி சீதா நீ கெற்ப முற்றிருப்பதால் நாடொப்பன பலதுணிமணிகளிலோ பழவர்க்கத்திலோ அதிரசத் தின்பண்டங்களிலோ விருப்பமுற் றிருப்பாயென்று கேட்க காடுபார்க்க ஆவலுற்ற உன் கதை எனக்கு மிகும் கவலையைத்தருகிறது. ஜானகி வேண்டாம் வேறெதுவும் கேள்.

### சீதை வசனம்

என்னுருயிரே எனதுமனம் சதாவும் நாம் மூவரும் முன்னே சென்ற தபோவனக்காக்ஷியை ஒரு க்ஷணமும் மறக்கக் கூடுதில்லை ஆதலால் சுவாமி தயவு செய்ய வேண்டும்.

ராமர் பாட்டு. ஜாயிண்டு. இத்துஸ்தான் மெட்டு.

இராகம் பியாக்கு. தாளம் ரூபகம்.

மதிமுகவதி எனதுயிர் சதி
வனமே யேகுதல் என் கதி — ம

சீதை — முனமே சென்ற மா தபசிகள் பதி
முழுதும் பார்க்க யென் சம்மதி — மு

தோகையரு.

ராமர் — கானகம் யேகுதல் கண்ணியரின் ஆசையோ
காணுதல் ஆச்சரியமே

தோகையரு.

சீதை — கண்ணினிய காக்ஷிகள் மிஞ்சுவன பஞ்சவடி
கனவிலனுதினந் தோற்றமே

ராமர் பாட்டு. — உறுதி கொண்டனே மருகி நின்றனே
உன் மனம் பெரும் பேதையே — ம

சீதை — தர்ம நாயனே சர்வ ரூபனே
தந்தருள் விடை தாமனே. — மு

### ராமர் வசனம்.

பெண்ணே! உலகத்தினிடத்தே உன்னைப்போல் பெண்களைக் கண்டதே இல்லை கண்ணே ஏதேனும் பதார்த்த வகையில் இச்சையிருக்கலா மென்றல்லோ கூறுவர் நீ தெரிவிப்பதை கவனித்தால் ஆச்சர்யமே. பரவாயில்லை முன்னொருக்கால் வனவாசத்தால்கண்ட காக்ஷிகளையும் இப்பொழுது நினைத்து அவ்வகையில் ஈடு பட்டனை போலும் ஆருயிரே இன்னும் சிலது நாள் கழியட்டும் உனக்கு விடையளிக்கிறேன் அப்பொழுது சென்றுவரலாம் அந்தப்புரம் சென்று வருவாய்.

### சீதை வசனம்.

சுவாமி அடியாளை மன்னிக்கவேண்டும் முன்னே நாம் சென்ற தண்டகாருண்யத்தை மறுமுறையும் பார்க்க ஆவலுடையவளாய் கனவிலும் மறவாதவளாய் அதே கவலையோடு எந்தச்சமயம் தங்களிடம் உத்திரவு பெற்று நாமிருவரும் போவோமென்று எதிர்பார்த்தேயிருந்தேன் இவ்வமயம் எனக்கேது இஷ்டமென்று தேவரீர் கேட்டதால் உண்மையை வெளியிட்டேன். எவ்விதத்திலாவது

இன்னொரு முறை சுவாமி அடியாளை அழைத்துச்செல்ல இறைஞ்சிக் கோருகிறேன். நான் வருகிறேன் பிராணபதி.

ராமர் வசனம்.

கண்மணி! உன்னிஷ்டம்போலவே விடைதருகிறேன்.

காக்ஷி முடிவு (சீதை மறைகிருள்)

## 3-வது காக்ஷி இடம் ஆலோசனை மண்டபம்

பாத்திரங்கள் ஸ்ரீராமர், சுமந்திரர், காவலர்

ராமர் வசனம்

சுமந்திரரே என்ன! தம்முனது வதனம் வெளுத்த விதமாயும் மருண்ட பார்வையுடனும் ஆழ்ந்த யோசனையுடனும் தோற்று தலைது பற்றி ஐயா! தங்களது அகத்தில் ஏதாவும் நிகழ்ந்ததா அல்லது நமது ராஜ்யவிஷயமாய் வித்தியாச செய்தி வந்ததா இன்னதெனத் தெரிவியுங்கள்.

சுமந்திரர் வசனம்

புருஷோத்தமரே எப்படிச் சொல்லுதலென எனக்கு நாவுக்கு ஸ்மரணை தப்புகிறது. ஆயினும் தேவரீரிடம் புகன்றே தீரவேண்டியதிருப்பதால் அதையுரைக்கிறேன் நேற்றய தினம் இரவு நம்நாட்டில் நகர் சோதனைக்குச் சென்ற இருகாவலர்கள் வண்ணார் வீதியில் வரும்பொழுது அங்கு ஒரு வண்ணான் அயல்மனை சென்று சில நாள் சுணங்கிப் பின்வந்த தன் மனையாளை அடித்துத்துரத்தினனைப் பக்கத்துள்ளவர்கள் அவளுக்கு இனி நல்ல புத்தி வந்து விடும் நீ அவளைச் சேர்த்துக் கொளளென்று சொல்ல அந்தவண்ணான் நானும் ரெகு நாயகரைப் போல் எத்தனையோ காலம் இன்னொருவனிடம் போயிருந்த தேவியாரை மறுபடியும் சிறைமீட்டுக் கொண்டு வந்ததுபோல் செய்பமாட்டேன் என்றுரைரும் அதனைக் கேட்டுவந்த காவலர்கள் இன்று எனக் கறிவித்தார்கள். என்ன! கேவலமொழியைக் கேட்க நேர்ந்தது பார்த்தீரா ராமச்சந்திரரே! உலகமாதாவாயிலங்கும் ஸ்ரீ தேவியாரையும் ரெகுபதியான தேவரீரையும் பழிப்புரை செய்த பாதக வண்ணானை என்ன செய்யத் தீர்மானிக்கிறீர்கள்.

ராமர் வசனம். (பெருமூச்செறிந்து)

ஹா! இப்படியுமா என் தலையிலெழுதியிருந்தது சுமந்திரரே மழை யொழிந்தும் தூவானம்கழிய இல்லையே பழியெல்லாம் தீர்ந்ததெனவென்றே நினைந்திருந்த எனது நெஞ்சிடை ஒழியாப்பழி உலகத்தில் நிறைந்திருக்கிறதாகவன்றோ இப்பொழுது வெளியா

கிறது ஐயோ! ஐயோ! தொலையாத துன்பமே அழியாத கேவலமே, ஹா! இது என் பங்கிலா கிடைக்க வேண்டும் நான் இனி இவ்வுடலெடுத்துவைதல் உலகத்திற் கொப்புமா ஒரு நாளுமில்லை ஒன்று சீதை ஒழிதல் வேண்டும் இல்லையேல் நானே மடிதல் வேண்டும் இரண்டிலொன்று ஆகாவிடில் இப்பழிமறைவது அசாத்யம் ஐயா தங்கள் யதாஸ்தானம் சென்றுவாருங்கள் இதற்குப் பரிகாரம் நான் செய்து கொள்ளுகிறேன்.

சுமந்திரர் வசனம்.

என்ன செய்யப் போகின்றீர்கள்

ராமர் வசனம்.

வீட்டிற்குள் வைத்திருக்கும் வினையை விரட்டி ஒழிப்பது அல்லது நானே அழிவது.

சுமந்திரர் வசனம்.

ஹா! என்ன காரியம் செய்யநினைத்திருக்கிறீர்கள் சுவாமி நாட்டிலுள்ள ராஜதுவேஷியைக் கருவறுக்காமல் தன்னைத்தான் நொந்து கொள்வது தர்மமோ.

ராமர் வசனம்.

மந்திரியாரே எய்தவனை நோகாமல் அம்பை நொந்து கொள்வானேன் நம்மிடமுற்ற கேவலத்தை யாரும் சொல்லத்தான் நேரிடும் அதற்காக உலகத்தை அடக்குவது அதர்மமாகும்.

சுமந்திரர் வசனம்.

சுவாமி நீங்களறியாததை நான் சொல்லவரவில்லை ஆயினும் தீர ஆலோசித்துச் செய்யுங்கள் நான் வருகிறேன்.

ராமர் வசனம்

நல்லது மந்திரி சென்று வாருங்கள்.

யாரடா காவலன் தம்பிமார் மூவரையும் அழைத்துவா சீக்கிரம்

காவலன் வசனம்.

தேவ தேவா உத்திரவு.

பரதர் வசனம்.

அண்ணா நமஸ்காரம் அடியேனை அழைப்பித்த காரணம் அன்றியும் முகத்தில் ஓர்விதமான விசனக்குறி தோன்றுகிறது சீக்கிரம் தெரிவியுங்கள் அண்ணா.

ராமர் வசனம்.

தம்பி பரதா நான் விசனமாய் இருப்பதை நன்குணர்வாய் என்றாலும் நான் தெரிவிக்கிறேன் கவனி.

பாட்டு அதிஷ்டம் வந்த உடன் என்ற மெட்டு.

வல்லவர்களென வாழ்ந்ததும் போச்சே
வானுலகம் வரை யேசிட லாச்சே
கன்னல் மொழி சீதையால் காலமிப்படி யாச்சே
கானகம் கொண்டவளை விடுகவென் பேச்சே

வசனம்

பரதா இச்சீதையால் நமது வம்சத்திற்கே ஹீன மென்பது இன்னும் நீ தெரிந்துகொள்ள வில்லையா தசரத ராமன் என்ற கீர்த்தியே அடியோடு துலைந்தது. என்று நினை நாம் இனி உலகினில் வாழவும் வேண்டுமா. குலத்தின் நலத்தைக் கெடுக்கும் பெண்ணை நாம் நாட்டில் வைத்து வாழவும் வேண்டுமா உலகில் இருக்கவும் தகுமா சூரியன் உதயகாலத்திற்கு முன்னமே கொண்டுபோய் வனத்தில் விட்டு வரவேண்டும் என்ன தெரிவிக்கின்றாய்
ஏன் பேசாது நிற்கின்றனை

பரதன் பாட்டு ஷை மெட்டு.

குற்றமொன்றில்லாத குலக்கொடியைக் கொண்டு
கொடிய அடர் வனத்தில் விடலாகுமா
துஷ்ட மிருகவகை திடர்வதைக் கண்டு
துன்பப் படவுமிகப்பரிதாபமா.

வசனம்.

அண்ணா கருணையங்கடலே என் இப்படிப்பேச ஆரம்பித்து விட்டீர்கள். (அழிவதூஉ மாவதூஉ மாகிவழி பயக்கு மூதியமுஞ் சூழ்ந்து செயல்.) என்றபடி திடீரென்று ஒரு காரியத்தை செய்யுங்கால் அதனல் அடையும் நன்மையும் தீமையும் இன்னதென தெரிந்தே செய்ய வேண்டும் என்று ஆன்றோர் வாக்கு இதையெல்லாம் உணர்ந்தும் லோகமாதாவாயும் ரக்ஷகியாயும் இருக்கப்பட்ட சீதாதேவியை குறை கூறி காட்டில் விட்டு வருவதென்றால் தகாத காரியம் அண்ணா, அன்றியும் கற்புடைய மங்கையர் மனம் நோகுங்கால் அப்பாதகம் நம்மையே சாரும் உலகம் பழி கூறும் வேண்டாம் இந்த ஒரு பிழையை மன்னிக்க வேண்டும் அண்ணா.

ராமர் வசனம்.

பரதா! உத்தமனென்றல்லோ இருந்தேன் இதுவரை யெனக்கெதிர் மொழிபகராதவன் இன்று சகலகலைகளையும் கற்றுணர்ந்தவனைப்போல் நீ மதிகூறத் தொடங்கினை, இனி இந்த இடத்தில் நிற்க வேண்டாம் என் முகத்தில் விழிக்காது செல்.

(லக்ஷ்மணனைப்பார்த்து)
ராமர் பாட்டு ஷை மெட்டு.

தம்பி லக்ஷ்மணா!

அண்ணியர் முன்னொருக்கால் சொன்ன மொழியைநீயும்
எண்ணமலிருப்பது என் புரிவாய்
வர்ணமேனியாளை வனத்திற் கழைத்துச்சென்று
வாழ்ந்திடவும் விட்டு நீ வருவாய்

(வசனம்) லக்ஷ்மணா முன்னொருநாள் உன் அண்ணியார் வனத்தைப் பார்க்க ஆசையுற்றவளாய் இருக்கிறேனென்று தெரிவித்ததும் அதற்கு நான் சமயத்தை எதிர்பார்த்து அனுப்பி வைக்கிறேனென்று தெரிவித்த விஷயமும் நீ நன்குணர்ந்ததே அன்றியும் இத்தருணம் அதற்குகந்து இருப்பதாய் தெரிந்தே உன்னை யழைப்பித்தேன் ஒரு பதிலும் கூறாது ரதத்தில் ஏற்றிக்கொண்டு வனத்தில் விட்டு திரும்புவாய் சீக்கிரம்.

(லட்சுமணர் வசனம்) சீறிய பார்வையுடன், யாரை.........
என் அண்ணியாகிய தேவியாரையா நானா வனத்தில் விட்டு வர வேண்டும் பின்பு நாம் இவ்வுலகினில் (காலைப்பூமியிலறைந்து) வாழ வேண்டும் அண்ணா அண்ணா ராமண்ணா கனவுகண்டீர்களா ஐயோ உங்களுக்கு ஏன் மனத்திடம் இப்படி மாறியது உங்கள் குணத்தின் தன்மை எங்கே போயது

பாட்டு ஷை மெட்டு

கெட்டகாலம் நமக்கு கிட்டியதோ அண்ணா
விட்ட குறையோ உடன் பற்றியதோ
உற்ற சேதியோ ஐயோ உலகந்தான் சகிக்குமோ
ஓங்கிய காட்டில்விட அது நீதியோ

(வசனம்.) ரெகுபதி! நமது வாழ்விற்கு கெட்டகாலம் கிட்டியது யென்பதற்கு சந்தேகம் உளதோ ரெவிகுலத்தை இன்றே வினை சூழ்கிக் கொண்டது என்று கூறுவேன் அண்ணா களங்கமற்ற நெஞ்சத்தையுடைய தேவியை பழி சுமத்தினால் குலக்கேடு விளைவதற்கு சந்தேக முளதோ எவனோ சொன்னானென்று இதையெல்லாம் பொருட்படுத்துவது (குற்றமே காக்கப் பொருளாகக் குற்றமே யற்றந்தருவும் பங்க) என்றபடி அந்தியத்தில் சிந்திக்க தக்கதாகவே வந்துமுடியும் பதிவிரதைகளை வைத்தே உலக முதல் தெய்வம் வரை யென்று கூறுவர் அப்பதிவிரதைகளின் சாபம் நம்மைப்பற்றும் பழிச்சொல்லும் தூற்றும் எப்படி உங்கள் மனது ஒப்பி இப்படி செய்யத் துணிந்தீர் அன்றியும் கற்பவதியாயிற்றே சிசு தோஷமுந் தொடருமே இச்சண்டாளன் (நெஞ்சி லறைந்து) எப்படி மனஞ்சகித்து வனத்திற்கழைத்துப் போவேன் அண்ணா என்னை வேண்டி, இப்பிழையை பொருக்கவேண்டும் அண்ணா

(ராமர் வசனம்.) அப்பா பதினான்கு வருடம் வனவாசித்த காலத்தே நீ ஒரு பதிலும் தெரிவிக்கவே இல்லை இப்பொழுது

ஞாயம் கூற வந்தனை (தீயினால் சுட்டபுண் ணுள்ளாறும் மாறாதே நாவினால் சுட்டவடு) என்றபடி எக்காலமும் மாறாத கேவலச் சொல்லைத்தாங்கிய ஓர் பெண்ணையும் நாம் வைத்து ராஜ்யபாரம் பண்ண உனக்கு சம்மதிதானோ அடே சண்டாளா வெனக் கெதிர் நிற்பையேல் கோபம் வரும் சென்றுவிடு சீக்கிரம்.

(சத்துருக்கனைப் பார்த்து)

பாட்டு நீயே சகாயமென என்ற மெட்டு.

தம்பி சத்துருக்கனே சாற்றுமொழியைக் கேளாய்
சஞ்சலங்கொண்டேனெடுநாளாய்
வெம்பினேன் சீதையாலே
வீண்பழி ஏற்றேன் மேலே
அம்புவியிலில்லாது அடர்வனம் விட்டு வாராய். (தம்

(வசனம்) அப்பா உனக்கு மூத்த இரண்டு பேர்களும் நமக்கு யேற்பட்ட கேவலத்தை பொருட்படுத்தாது அவமதித்து விட்டார்கள் அவ்விருவரையும் என்னுடன் பிறப்பாளரில்லை யென்றே நினைத்தேன் என் அன்பினை யொத்த சத்துருக்கனே நீ யாகிலும் எனக் கெதிர்மொழி பசாது சீக்கிரம் உன் அண்ணியரை வனத்தில்விட்டு வருவாயென்று நினைக்கிறேன். யென்ன தெரிவிக்கிறாய் ஏன் மௌனம் சாதித்துக் கொண்டிருக்கிறாய்.

சத்துருக்கனன் பாட்டு ஷி மெட்டு.

அண்ணா இப்பரிதாபம் ஆறாதே இச்சாபம்
யெண்ணாமல் வந்த இந்தக் கோபம்
அன்னை ஜானகியாரை அடர்வனம் விட்டுவந்தால்
என்ன தீங்குகள் நமக்கேற்படுமோ இன்னாள் அண்

வசனம்.

சர்வலோக சரண்யா! ஏது சித்தம் தியங்கி இப்படிப் பேசலுற்றீர் வாய்மைமேய கங்கணமாய் பூண்ட தேவா என் மதிமயக்கங் கொண்டீர் (பொருத்தோர் பூமி யாண்டார் பொங்கினோர் காடாண்டார்) என்று தெரிந்தும் நாங்கள் பதில் பகர நேர்ந்ததே. அண்ணா தயை புரிய வேண்டும் இவ்வகையில் முனிந்து கூறலாகாது அண்ணா. )

(ராமர் வசனம்.) அடே இதுவரை உடன் பிறந்த சகோதரர்களென்றே நினைத்தேன் ஆனால் இப்பொழுது அப்பிறப் புரிமை நீங்கிற்று யென் எதிரில் ஒருவரும் நிற்க வேண்டாம்.

இழிவரின் வாழாத மானமுடையா
ரொளி தொழுதேத்து முலகு. என்றபடி மானத்திற் கஞ்சி உயிர் விட்டவனுடைய புகழ்வடிவத்தை மூவுலகும் துதி

செய்யுமென்றல்லோ கூறுவர் வாஸ்தவம் இப்பழிக்கு நாமே காரணம் இதோ உடைவாளால் என்னுயிரை மாய்த்துக் கொள்ளுகிறேன்.

(லக்ஷுமணர் வசனம்) அண்ணா அண்ணா கோபத்தை தணியுங்கள் சற்று நிதானியுங்கள் அண்ணா.

ராமர் உடைவாளை யெடுத்து உயிர்மாய்க்கப்போகிறார் லக்ஷுமணர் கையை கெட்டியாய் பிடித்துக் கொள்ளுகிறா.

ராமர் பாட்டு இராகம் நாட்டைக்குரிஞ்சி தாளம் சாப்பு

எந்தன் கையைப் பிடிக்க உந்தனுக்கு சொந்தம்
ஏது முண்டோ சொல்லடா தள்ளிநில்லடா அடா — எந்

விந்தையதாய் மொழிவிண்டீர்களே பதில்
விலகியது தாசிபேஷ்டது நில வுலகில் — எந்

(வசனம்.) நீயார் என்கரத்தைப் பற்றியவன் என்சொல்லை மறுத்த சண்டாளன் நீ ஏன் என்னைத்தடுக்கிறான்

(லட்சுமணர் வசனம்.) பிழைபொறுத்தருளல் வேண்டும் கோபத்தை ஆற்றல் வேண்டும் அடியேன்மேல் கிருபை கூர்ந்து கடாக்ஷிக்க வேண்டும்.

பாட்டு எப்புடு கிருபா கல்குநோ என்ற மெட்டு,

பல்லவி

தப்பிதம் யார்தான் செய்தது
தசரத ராமா ராமா — தப்

அநுபல்லவி.

ஒப்பில்லா சீதை தன்னை உயர்வனம் கொண்டுபோனால்
இப்புவிமேலேசலென்றே செப்பினேன் வேறேதுமுண்டோ — தப்

சரணம்.

பெண்ணினாலுயிரிழக்க மண்ணுலகமுஞ் சிரிக்க
பேதைமனம் ஏதோ ஐயா மாதவத்தானே மெய்யா
பாதகனென் மீது கோபம் பாவிக்க வேண்டாம் சுவாமி
நீதறும் அண்ணியரோடு சென்று வருவேன் காடு — தப்

(வசனம்) அண்ணா இது என்ன ஆச்சரியம் உலகம் பலவிதம் என்பதை அறியீரா ராமரோ தோராணைக்காக ஓர் சொல்லைச் சொன்னானென்று தெய்வத்திற் கொப்பாகிய என் அண்ணியரைக்கொண்டு போய் வனத்தில் விட்டுவரவேண்டும் இல்லையேல்உயிரைமாய்த்

ஆக் கொள்வேனென்றால் உலகம்நம்மை மதிக்குமா இது தங்களுக்கு தகுமா?

(ராமர் வசனம்) நீ இந்த இடத்தில் எனக்கு ஞாயம் கூற வேண்டாம் சென்று விடு. கேவலம், ஓர் வண்ணான் உரைத்த சொல் உனக்கு இழிவாகத் தோன்றவில்லை போலும்.

லட்சுமணர் முன்னுரை விருத்தம்

கொண்டிடும் பெண்டுக்காக கொற்றவன் உயிரை மாய்த்தால்
அண்டமா முனிவர்க் கெல்லாம் அடுக்குமோ இந்தவார்த்தை
வண்டணி சீதைதன்னை வனத்தினில் விட்டு வாரேன்
தொண்டன் நான் உந்தன் பாதம் திருவுள்ள மகிமைதானே

பாட் பெண்ணினுலுயிரிழக்க என்ற சரணத்தோடரை
பாடிக்காட்ட வேண்டியது.

(வசனம்) அண்ணா கொண்ட மனைவிக்காக உயிரைமாய்த்தால் தேவர்கள் நகையார்களா துஷ்ட சம்ஹார சிஷ்ட பரிபாலன மூர்த்தியாகிய ராமச்சந்த்ரன் மனந்தாளாது தற்கொலை கொண்டார் என்று வசை கூறுறு ஐயோ இச்சண்டாளன் (தலையிலடித்துக் கொண்டு) என் தாயை வனத்தில் விட்டு வரவேண்டுமா நான் நற்கதி யடைவேனா என்தலையில் ஈசன் இப்படியா எழுதினான் யென் செய்வேன் (ஊழிற் பெருவழியாவுள மற்றொன்று சூழினுந்தான் முந்துறும்) என்றபடிநாம் என்ன செய்ய முடியும் அண்ணா இப் பாதகனுக்கு விடையளியுங்கள் சென்று வருகிறேன்.

(ராமர் வசனம்) லக்ஷ்மணா கவலையை யொழி. சூரிய உதய காலத்திற்கு முன் தண்டகாருண்ய வனத்தில் கொண்டுவிட்டு வா சீக்கிரம்.

காக்ஷி முடிவு. (லக்ஷ்மணர் தலையிலடித்தவண்ணம் வெளியே போய் விடுகிறார்)

## இரண்டாவது அங்கம்.

முதல் காக்ஷி இடம் அந்தப்புரம்.

பாத்திரங்கள், ஜானகி, கோசலா தேவியார், லக்ஷ்மணர்.

லக்ஷ்மணர் முன் வாசலில் நின்று துக்கித்தல்.

(ஆத்மபதம்) ஹா! என்ன என் தலைவிதி. நானும் ஒரு மனிதன் தானா. ஐயோ! ஒரு பாபத்தைச் செய்யாதவரும் காருண்யம் நிறைந்தவரும் பொறுமையில் பூமிதேவியை நிகர்த்தவரும், லோக

நாயகியருகிய ஸ்ரீ சீதாமதியாம் எனதன்னையை நானே அருங்காட்டில் விட்டுவருவதாய் ஒப்புக்கொண்டேனே என் போன்ற பாதகனொருவன் இவ்வுலகிலிரானென்றே நினைக்கிறேன். அந்தோ பரிதாபமே. பரிதாபமே. இதை யெப்படிச் செய்யத் துணிவேன். அங்கு மறுத்தால அண்ணரிறப்பார். இங்கு கவனித்தால் எனதன்னையொழிவாள். ஆகவே இரண்டிலொரு பழிக்கு ஆளாகவேண்டியவன் நானுகவன்றோ இலங்குகின்றேன் இதற்காகவா புண்ணிய தசரதர் தபத்தில் பிறந்தேன். ஐயோ! நினைக்க நினைக்க நெஞ்சம் வெடிக்கிறது. என்ன என் புத்தியே போதமற்றுப்போகும் போல் தெரிகிறது இதில் நான் நிதானிக்காவிடில் மோசமாய் முடியும். ஆகவே (எண்ணித்துணிவது கர்மம் துணிந்தபின் எண்ணுதல் இழுக்கு) பாபம் என்று துணிந்துசெய்ய எற்றுக்கொண்டபின் அதனைப்பற்றி வருந்துதலிழுக்கைத்தரும் ஆகையினுல் நான் மற்றொன்றையும் யோசியாமல் பிராட்டியாரிடம் செல்கிறேன்.

(லட்-ர் வ-ம்) அம்மணி அடியேன் நமஸ்காரம்.

(சீதைவ-ம்) சிரஞ்சீவியாக. இளையபெருமாளே! தர்பாரிலிருந்து இப்பொழுதுதான் வருகின்றீரா. யாது விசேடம். தமது தமயனர் ஏதாகிலும் தெரிவித்தாரா(அகத்தின்அழகு முகத்தினில்) என்றபடி உன் ஓர்விதமான முகவாட்டம சீக்கிரம் தெரிவியும்.

(லட்-ர் வ-ம்) தாயே தங்களிடம் தெரிவிக்காத விஷயம் ஒன்றுளதா தாயே ரெகுநந்தரிடம் தாங்கள் தண்டகாருண்ய வனம் பார்க்க விடைகேட்டதுண்டா:

(சீதை வ-ம்) வாஸ்தவம். நான் ரிஷிகளுடைய சேவையையும் அங்குள்ள மான் மறை முதலிய பக்ஷி ஜாதிகளையும் பார்க்க ஆசையுடையவளாய் இருக்கிறேன். என்று தெரிவித்த துண்மைதான்.

(லட் ர்வ-ம்) அதற்காக இன்று சுபதினமாகையால் இப்பொழுது அழைத்துப்போகும்படி உத்திரவு கொடுத்திருக்கிருர். அடியேனும் ரதத்தை அலங்கரித்து புரவிகளைக்கட்டி கீழ் வாசலில் நிறுத்தியிருக்கிறேன் தாயே.

(சீதை வ-ம்) சந்தோஷம் இளையவரே இப்பொழுதாகிலும் உத்திரவு கொடுத்ததைப்பற்றி மகிழ்ச்சியடைந்தேன். நான்செய்த பாக்யமே. ஆனுல் எனது மாமிமாரிடம் உத்திரவு பெற்றுவருகிறேன்,

மாமி நமஸ்கரிக்கிறேன் மாமி முன் ரெகுபதியிடத்தில் தண்டகாருண்ய வனத்தைப்பார்க்க வேண்டுமென்று உத்திரவு கேட்

டேன். அதற்கு ரெகுநாயகர் சிலது நாள் கழியட்டும் உத்திரவு கொடுக்கிறேனென்றவர் இப்பொழுது விடைகொடுத்து இளைய பெருமாளை ரதத்தோடு அனுப்பி இருக்கிறார். அன்னவரும் வெளி வாசலில் நிற்கிறார். நான் வனத்திற்குப்போய் மகா தவயோகிகளை சேவித்து திரும்புகிறேன். தயை செய்து அடியாளுக்கு நல்ல ஆசி கூறி யனுப்ப வேண்டும்.

(கௌசலை வ-ம்) அம்மா வேண்டாம். இன்னும் கொஞ்சக் காலம் போகட்டும். வனம் போய் பார்த்து வரலாம் எங்களுடைய வார்த்தையை மறுக்காதே அநேக நதிகளைக் கடந்து செல்ல வேண்டியதாயிருக்கும். நீயோ கர்பவதியாய் இருக்கிறாய் இந்த சமயம் போவது சரியல்ல. உன்னைப்போவென்று சொல்வதற்கு யென் மனம் எப்படிச்சம்மதிக்கும் தாயே.

(சீதை வ-ம்) அப்படி தாங்கள் தெரிவிக்கக் கூடாது. நான் கூடிய சீக்கிரம் பெரியவர்களுடைய ஆசீர்வாதம் பெற்று வருகி றேன் நேரமாகிறது இளையவர் வெளிவாசலில் நிற்கிறார். காலதாம தம் செய்தால் ரெகுநாயகருடைய கோபத்திற்காளாவேன் அம்மா சந்தோஷமாய் விடையழியுங்கள்.

(கௌசலை வ-ம்) அம்மா நான் எவ்வளவு கூறியும் ஒரே பிடி வாதமாய் வனம் போகவேண்டுமென்றே சாதிக்கின்றனை. ஆனல் நீ கூடியசீக்கிரம் தபசிகளின் ஆசி பெற்றுமணமங்களமாய் திரும்பி வருவாய்

(வெளியில் வந்து லக்ஷ்மணரைக் காண்கிறாள்)

(லட்-ர் வ-ம்) தாயே இவ்வளவு காலதாமதம் செய்த காரணம் ஏது ? முகூர்த்தகாலம் தவறிவிடும். அம்மணி ஜல்தியில் ரதத்தில் ஆரோகணியுங்கள். ரதத்தை நடத்துகிறேன்.

(சீதை வ-ம்) அப்படியே செய்கிறேன்.

ரதத்தை நடத்திக்கொண்டு செல்கிறார்
ஊரைக்கடந்து போகிறது.

காக்ஷி முடிவு

2வது காக்ஷி இடம் நாட்டைக்கடந்த எல்லை பாலைவனம்.

பாத்திரங்கள், லக்ஷ்மணர், சீதை,
அச்சுமுறிந்து ரதம்கீழ்சாய்கிறது

(லட்-ர் வ-ம்) ஐயோ இதென்ன விபரீதம். ஒருக்காலும் இல் லாத அபசகுணம் இன்று யேற்பட்டிருக்கிறது. என்ன தீங்குகள் வருமோ ராமச்சந்த்ரா.

பாட்டு பட்டுவாகூந்தளு என்ற மெட்டு.

என்னசெய்வேனண்ணு எது செய்வேனினி
இப்படி வந்து விளைந்ததிங்கே
முன்செய்த வினையோ முடிந்ததய்யோ நான்
அன்னைக்குச் செய்த அபச்சாரமோ.

கல்லைப்பெண்ணாக்கிய காரணனே அந்த
வில்லையொடித்தமா பூரணனே
எல்லை கடக்கையில் அச்சு முறிந்தது
ஏது மாயமென்றறியேனனே (என்ன)

(வசனம்) ஆகா! அகிலபுவன சரண்யா, யென்ன அபச்சாரம் செய்தேன் பெண்பாவத்தையேற்றுக்கொண்டு நடுவனத்தில் யாருடைய உதவியுமில்லாது விட்டுவருவதற்கு சம்மதித்தேனே அத்தோஷம் தான் குறுக்கிட்டதோ தாயே மயங்கவேண்டாம் சற்று நேரத்தில் வேறு அச்சைப்பூட்டி வனத்தை நோக்கி ரதத்தைக் கொண்டு போகிறேன்.

(சீதை வ-ம்) இதனல் என்ன நேரிடுமோ தெரியவில்லை சீக்கிரமாக ரதத்தை நடத்தும் இளையவரே.

(லட்சுமணர் வ ம்.) அம்மணி அப்படியே சீக்கிரம் ரதத்தை நடத்துகிறேன்.

(போகும்பொழுது அநேக அபசகுனங்கள் தோற்றுகிறது சீதை பரிதாப மடைகிறுள் இளையவர் ஆறுதல் கூறி செல்லுதல்)

(சீதை வ-ம்) நாம் அயோத்தியைவிட்டு புறப்பட்டு வரும்பொழுது ரதத்தின் அச்சு முறிந்ததே கெட்ட சகுனம். அதற்கு நீர் ஏதேதோ சாக்குகளைச்சொல்லி இவ் வனம் வந்தும் இன்னும் அநேக அபசகுனங்கள் தென்படுகிறது என்ன தீங்குகள் ஏற்படுமோ தெரியவில்லை.

(லக்ஷ்மணர் வ-ம்) அம்மா! நமக்கு ஒருகுறைவும் ஏற்படாது தாயே, வள்ளலாகிய ராமபிரானை தியானித்துக்கொண்டிருங்கள்.

சீதை பாட்டு தெய்வமே நான் என்ற மெட்டு.

ஜம்பை தாளம்.

விறகு தலையுடனொருவன் வேகமாய் வருகிறுனே
வினைப்பயனுய் தோணுதிங்கு மனக்கவலையாகுதையோ விற

(வசனம்) இளையவரே, இதோபாரும் விறகுசுமையுடன் ஒரு

வன் நமக்கெதிர் வருகிறான் ஐயோ! இனி யென்செய்வேன்.

(லட்சுவ-ம்) அம்மா! இதுயென்ன பேதமை? விறகுகொண்டு போகிறான் பாதைமார்க்கம். அதற்கும் நமக்கும் என்ன தொந்தம் வனத்திற்கு வந்தால் துறவிகொண்டதை ஒக்கும். நமக்கு சகுண பேதமில்லை தாயே.

சீதை ஷ பாட்டுத்தொடர்,

விதவை ஒருபாவை இங்கு வீறிட்டே அழுதுவாராள்
விதிவசமோ எந்தனது மதியிழந்து வாடுதையோ வி

(வசனம்) அய்யா இதோ பாரும் அமங்கல்யவதி தலைவிரி கோலமாய் அழுதுகொண்டு நமக்கெதிரே வருகிறாள் இன்னும் என்ன யேற்படுமோ தெரியவில்லை.

ஷ பாட்டு.

நஞ்சரவங் குறுக்கிடுதே நரிகளெங்கும் ஊளிடுதே
வஞ்சமற்ற லக்ஷ்மணரே வகைகளொன்றுந் தெரியவில்லை நஞ்

(வசனம்) இளையவரே! இப்பேற்பட்ட அபசகுனங்களெல்லாம் தோன்றுகிறது வேண்டாம் நாம் திரும்பி அயோத்திக்குப் போய் நாளை மறுதினம் வரலாம் ரதத்லத திருப்பி ஒட்டுவீர்.

லட்சுமணர் பாட்டு முருகன்செயல் என்ற மெட்டு,

மாதவனின் நாமம் மறவாது வருவாயே
தீது அணுகாது புவிமீது அறிவாயே
பாட்டைவழி தோற்றுமிந்த காட்டில் வெகுகோடி
நாட்டினிலே போவார் வருவார்களெங்கும் நாடி
கொஞ்சமேனும் நெஞ்சினிலே அஞ்சிடலாகாது
தஞ்சம் ரெகுராமனருள் தானிருக்கும்போது

(வசனம்) அம்மணி! ஏன்? மனக்கவலை வேண்டாம். வழிமார்க்கம் நம்மைப்போல் எத்தனையோ போகவுங்கூடும் வரவுங் கூடும் இதையெல்லாம் யோசியாது அயோத்திக்கு திரும்பி போவதென்றால் என்ன பேதமை (இருள்சேரிருவினையுஞ் சேரா விறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு.) என்றபடி சர்வரக்ஷகனுகிய ஈஸ்வரனின் புகழை யாரொருவர் இடைவிடாது பஜித்து வருகின்றார்களோ அவர்களுக்கு தீவினை யென்பது அணுகாது. என்று ஆன்றோர் வாக்கு அப்படி இருக்க நீங்கள் கவலைகொள்ளத்தகுமா ரெகுநாதனை மனதில் தியானித்துக்கொண்டால் நமக்கு யேது குறை? தாயே! எல்லாம் வினைப்பயனென்றறியவேண்டும். நாம் பரிதபிப்பதில் யாது பயன்? தாயே!

தண்டகாருண்ய வனம்.

(சீதை வசனம்) இளையவரே! முனிவர்களைக் கண்டு அவர்கள் அருட்ப்ரசாதத்தைப் பெற்றுப் போகவந்தோம் அந்த வனம் இது இல்லை யென்று தோன்றுகிறது. துஷ்ட மிருகங்களாய் புலப்படுகிறது அவர்கள் வசிக்கும் வனம் இன்னும் எவ்வளவு தூரம் இருக்கலாம்.

லட்சுமணர் பாட்டு தக்கபாரங்கல்லே என்ற மெட்டு.

தாயே சீதாதேவி பாராய் அதோ
தழைத்த வனத்திற்கு நேராய்

தூயதோர் ஆச்சிரமம் சீருய் பார்க்க
தோணுது போகலாம் வாராய்

(லட்சு வம்) அம்மா! அதோபாருங்கள் நமக்கெதிரில்காணும் வனத்தைக்கடந்தால் அடுத்தாப்போல் தபசிகளுடைய ஆச்சிரமங்கள் தென்படும் தாயே கவலை வேண்டாம்

(சீதை வசனம்) இளையவரே! நமக்கு முன்னேற்பட்ட வனவாசக்காலத்தில் நாம் மூவரும் வரும்பொழுது ஒவ்வொரு ஆச்சிரமங்களை ரகுநாயகர் காட்டி ஆங்காங்குள்ள காக்ஷிகளையும் ரிஷிகளுடைய நாமதேயங்களையும் தெரிவித்தும் அவர்களுடைய ஆசி பெற்றும் போனதை நினைத்தன்றோ திருப்பவும் பார்க்கவந்தேன். அவ்விசேஷ சம்பவங்களொன்றுவதுகண்களுக்குப் புலப்படாதிருப்பதற்கு காரணம் என்ன? நினைக்கப்பெரும் சந்தேகத்திற்கன்றோ இடந் தருகிறது.

லட்சுமணர் பாட்டு டி மெட்டு

சந்தேகங் கொள்ளலாகாது அந்த
தபசிவனத்தை இப்போது

விந்தையாய் காண்போம் தப்பாது தாயே
வேறே நினைக்கத் தகாது.

(வசனம்) தாயே சந்தேகம் வேண்டாம் அதோ ஓங்கி ஆகாயத்தை அளாவிக்கொண்டு சந்த்ரப்ரகாசமே தெரியாது படர்ந்து அடர்ந்து இருக்கிற இந்த வனத்தைக்கடந்தால் பர்ணசாலைகளும் ரிஷிகளின் சேனையும் நமக்கு நிச்சயமாய் தென்படும். பட்சி ஜாதிகளையும் காட்டுகிறேன். கவலை வேண்டாம்.

(சீதை வசனம்) இளையவரே இதோ கங்கா நதியையும் யாகசாலைகளையும் கண்டேன் வேதகோஷத்தின் சப்தமும் என் காதில் கேட்கிறது ரிஷீஸ்வரரை தெரிசிக்க வேண்டுமென்றால் இந்த கங்காநதிப்பெருக்கை கடந்துதானே செல்லவேண்டும் என் செய்வது.

(லட்சுமணர் வசனம்) அம்மணி சற்றுப்பொறுங்கள். இதோ படகுக்காரன் வருகிறன் அவன் மூலம் நதியைக் கடந்து செல்லலாம் தாயே.

அம்மா இந்த யிடத்தில் தங்கி இங்குள்ள முனிவர்களை சேவித்து செல்வது நலமென்று நினைக்கிறேன என் தமயனரும் அப்படித்தான் உத்திரவு செய்தார் தாயே.

காக்ஷி முடிவு.

3—வது காக்ஷி வால்மீகி முற்பாகம் வனம்
பாத்திரங்கள் லக்ஷ்மணர், சீதை.

(சீதையை ரதம் விட்டு கீழிரங்கச் செய்து லக்ஷ்மணர் தலை குனிந்தோர்புறமாய் விசனித்து நிற்கிறார்.)

(சீதை வ-ம்) இளையவரே! ஏன் இந்த இடம் வந்தவுடன் ரதத்தை விட்டுக் கீழே யிறங்கிக்கொண்டீர் தானே துக்கங்கொள்கிறீர் தலை நிமிராது பூமியைப்பார்த்தவண்ணம் கண்ணீர்வடித்து கொண்டு நிற்கிறீர் காரணம்? உண்மையை தெரிவியும் ஏதோ சூதாகத் தோன்றுகிறது. உமது தமயனர் ஏதாகிலும் தெரிவித்தாரா ஏன் பதிலில்லை?.

(லட்சுமணர் வ-ம்) (பெருமூச்செறிந்து) அம்மா! அம்மா!! நானெப்படிச் சொல்வேன் இப்பாவிஐயோ! இச்சண்டாளன் நாவெழவில்லை நான் எவ்வளவு சொல்லியும் எங்களுடைய வார்த்தையை நிராகரித்து ஒரே பிடிவாதமாய் வனத்தில்கொண்டுபோய் விட்டுவரவேண்டுமென்றே தெரிவித்தார் தாயே-

(சீதை வ-ம்) ஆகா! ஐயோ! இப்படியும் என் தலைவிதியோ.

(தலையிலடித்து தரையில் விழுந்து அழுதுகொண்டு,)

சீதை முன்னுரை விருத்தம்.

விதியெனக்கிதுவோ ஐயா விமலரே இளையகோவே
மதிமிகு ராமருக்கு வனப்பிழை செய்ததுண்டோ
துதிமிகும் உங்களண்ணன் சொல்லினை தவறிடாமல்
மதிமயக்கத்தாலே யானும் வனம்பார்க்க வந்திட்டேனே

(சீதை வசனம்) ஐயோ! ரெகுநாயகருக்கு செய்த அபசாரந்தான் என்ன! இந்த நடுவனத்தில் இப்பாவி ஒண்டியாய் என் செய்வேன் ஐயோ!

லட்சுமணர் பாட்டு தசரதராஜகுமாரா என்ற மெட்டு.

ஐயய்யோ நான் பெரும்பாவி அருள் மேவி
வனமேகி வந்தேன் துரோகி

செய்யாத குற்றமொன்றும் செய்ததாயில்லை
தேசத்தில் ஏதேதோ செப்பினரெனுஞ்சொல்லை
ஐயன் உமைக் கொண்டுபோய் அகற்றிவாவெனஎல்லை

ஆகையினாலே உகந்தோம் வனம் புகுந்தோம்
மதியிழந்தோம் மனம் நொந்தோம் ஐ

(வசனம்) குற்றமொன்றுஞ்செய்யாத தங்களை அடர்வனத்தில் விட்டு வரச்சொன்னார் உலகத்தில் எவனோ தீதானவார்த்தைகளைச் சொன்னானென்று இப்படிச் செய்யத் துணிந்தார். நாங்கள் எவ்வளவோ மறுத்துக்கூறியும் பிடிவாதமாய் பேச எத்தனித்தார் தாயே.

சீதை பாட்டு ஷ்டி மெட்டு.

பாதகி எந்தன் காலகெதியோ தலைவிதியோ
யார் செய் சதியோ இது தகுதியோ

பூதலமீதில் பெண்ணாய்ப் பிறந்தது பாவம்
பொல்லாங்கு விளைந்ததால் நேர்ந்ததிக்கோபம்
சொல்லால் மனது நொந்து துடித்தது மனஸ்தாபம்

சோதித்திடவும் சம்மதியே பெரும் நிதியே
ரெகுபதியே உந்தன் கெதியே (பா)

(சீதை வசனம்) இளையவனே! விதிவசம் யாரை விட்டது அரிஹர பிரமாதிகளை விட்டபாடில்லையென்றால் இச்சண்டாளியை எளிதில்விடத்தக்கதா ஐயோ! நான் யாருக்கு என்ன துரோகஞ் செய்தேன் பெரியோர்களை நிந்தித்தேனா யாசகர்களைவஞ்சித்தேனா என் நாயகருக்கு ஏதேனும் குற்றங்கள் செய்தேனா, கற்புடைய பெண்களுக்கேற்பட்ட விதிகளில் மாறுபாடாக ஏதேனும் நடந்திருப்பேனோ, என் மாமிமார்களுடையவார்த்தையைக் கடந்திருப்பேனோ ஈசன் இப்படியும் என் தலையில் வரையவேண்டுமா தசரத புத்திரர்களுக்கு மானக்கேட்டை விளைவிக்க இப்பாவி ஜெனகனின் வயிற்றில் ஜெனித்தேன் இளையவனே! தாங்களுடையுந் துன்பத்திற்கு இத்துர்ப்பாக்கிய வதியன்றோ காரணம் நீர் ஏன் கண்ணீர் வடித்து அழுகவேண்டும் என்னை இவ் வனத்தில் கொண்டுபோய் விட்டுவா என்று எப்படி உமது தமயனார் மனந்துணிந்து சொல்லியனுப்பினார் அவர்சம்மதியும் இப்படி இருந்ததா ஐயோ.

183816

லக்ஷ்மணர் பாட்டு ஷை மெட்டு.

ஒண்டியாய் உனை நடுவனத்தில் விட்டேனே
ஒழிந்தது ரெவிகுலம் இன்றோடு தானே
கண்டவரிகழக்குறை கொண்டேனே நானே

கனவிலும் மறந்திடேன் தாயே விடைநீயே
அருள்வாயே அதிநேயே

(வசனம்) தாயே தன்னைப் பெற்ற தாய் பசித்திருக்க தான் புசித்த பாதகர்களில் நாமொருவனன்றோ நம்பிவந்தவர்களை நட்டாற்றில் விட்ட சண்டாளர்களில் யானும் ஒருவனன்றோ கைகேசியால் பதினான்கு வருடம் வனவாசம் ஏற்பட்டகாலத்தில் ஆகாரங்களை வெறுத்தாலொழிய நித்திரை வராது அப்படி நினைவு மாறிக் காணும் பக்ஷத்தில் என் அண்ணாவுக்கும் தங்களுக்கும் ஏதேனும் ஓர்விதமான இடைஞ்சல் ஏற்பட்டு விடுமென்று என் கண்களுக்கு இமைகளை காவலாக ஜாக்கிரதை பண்ணி காத்து வந்தேனே அப்பிரவிப்பலன் இன்றோடு ஒழிந்ததென்றாலும் ரெவிகுலமே அடியோடு நாசமாய்விட்டதென்று உண்மையாய்க் கூறுவேன்என் அண்ணனுக்கு எவ்வளவோ நன்மையைக் கூறியும் அந்தியத்தில் அவர் தன் கைவாளால் மானத்திற்கஞ்சி உயிர் விட எத்தனிக்க அதைத்தடுத்தேன். அவருடைய வார்த்தைக் கிணங்கினேன் இவ்வனத்தில் உங்களை தனியாய் அலையவிடநேர்ந்தேன் கொடும் பாவியானேன் என்றாலும் யாதா மொருகதியுமற்று தனிமையுடன் புலம்பியழுதும் கண்ணீர் வீணில் போகாது அக்கினிக் கொப்பாகிய தங்களுடைய கற்பின் மகிமை பொய்க்காது. உலகம் பழிகூறாமல்இச்சண்டாளனை எளிதில் விடாது லோகசகாரணி இப் பாதகன் செய்த குற்றத்தை மன்னித்துக் கொள்ளுமாறு பன் முறையும் நமஸ்கரித்துக் கொள்கிறேன்.

(சீதை வசனம்) இளையவரே இச்சண்டாளியால் ஏற்பட்ட தோஷத்திற்கு நீர் என் அழுது தவிக்கிறீர் வேண்டாம்.

பாட்டு ஷை மெட்டு

பிழைகளில்லாது குற்றம் பிறப்பதும் யேது
பேதையான் செய்தகர்மம் சூழ்ந்ததிப்போது
வலையினில் பட்ட மீன் போல் வாடிட வனமீது

மயங்கி அலைவேனுனை புவிமீதே
மனவாதை பெருந்தீதே (பா)

(சீதை வசனம்) அனுதாக்ஷகா! ஆபத்பாந்தவா நான் எவ்வளவு தகாதகுற்றங்கள் செய்திருந்தபோதிலும் வேறு தண்டனை விதிக்கலாகாதா அல்லது தங்களுடைய உடைவாளால் கொன்று

விட்டாலும் நற்கெதி யடைவேனே ஐயோ! தன்னந்தனிமையாய் இந்த வனத்தில் என் செய்வேன் என் ஆபத்தை காப்பவர் இங்கு யாருளார் யாருடைய உதவியால் காலங்கழிப்பேன் மனித சஞ்சாரமில்லாத அடர்வனமாகவன்றோ தோன்றுகிறது. ஐயோ! ஒருவகை யறியாத பேதை உலகத்தில் ஜெனித்த பெண்களில் செய்யத்தகாத பாதகத்தைச் செய்த பாவி நானன்றோ. என் விதி வசத்தை யாரிடம் சொல்லி ஆற்றுவேன் தெய்வமே! தெய்வமே!!

பாட்டு நீலாம்புரி ராகம். தாளம் திருபுடை.

நாட்டினிலே பெரும் பாவி
நானே பிறந்தேன் மேவி
காட்டிலலைய விட்டீரே நாதா நாதா (நா)

(வசனம்) உலகத்தில் பெண்ஜென்மமெடுத்ததில் பாவி நானொருத்தியே ஐயோ! (தெய்வந்தொழா அற்கொழுநன் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யு மழை) என்றபடி தெய்வத்திற்கு பதில் தன் நாயகனைத் தொழுபவள் பெய்யெனப் பெய்யு மழை என்றது என் வகையில் பொய்த்ததோ அப்படி நாயகனைத் தெய்வமாய் கொண்டாடாதப் பாவியாகி விட்டேனே ஒரு குறையுஞ் செய்த தாய் தோற்றவில்லையே. முன்னொருக்கால் சண்டாள காகாசூரன் என் நாயகர் என்மடியில் நித்திரை புரியுங்கால் மர்மமாய் என் அங்கத்தைக் கோறப்படுத்தி உதிரம் வீரிட்டொழுக அப்பொழுதும் நித்திரை பங்கமேற்படுமென்று பேசாது இருந்துவிட்டேன் உகிரத்தால் கணைவுற்று எழுந்து அசுரனைக் கொன்றார் அதுவகையில் என் மனநிலையை அறியாதவராயில்லை ரெகுநாதர் இப்பொழுது ஒருபிழையும் செய்யாத என்னை இப்படிச்செய்ய மனந்துணிந்ததென் விதிவசமே.

லக்ஷ்மணர் பாட்டு ஷி மெட்டு.

வையகத்தில் வண்ணான் மொழி
வசைகூரலாச்சே பழி
ஐயன் விதித்த சதியே அம்மா அம்மா வை

(வசனம்)தாயே! வண்ணான் சொன்னான் அச்சொல்லே காரணமாய் முன்னின்றது இங்குவந்து நீ அலைய நேர்ந்தது எவ்வளவு தூரம் பொறுத்து ஆதரிக்கும் புண்ணிய மூர்த்திக்கு இது ஒரு பெருங்குற்றமென்று மனந்தாளாது இக்காரியம் செய்யத்துணிந்தார் யென் செய்வது அம்மா.

சீதை பாட்டு ஷி மெட்டு

நீரில்லாக் கிணறானேன்
நிழலில்லா மரமானேன்
யாரிடம் சொல்லி ஆறுவேன் தெய்வமே தெய்வமே

(வசனம்) இளையவரே! நான் தனியாய் இருந்து தவித்து திரிவதைப்பார்க்கிலும் மிருகங்களாகிலும் பக்ஷிக்குமென்றாலும் பாவாயில்லை அதற்காகிலும் நல்ல ஜென்மமெடுத்தேனு இன்னும் என் தலையோட்டில் எப்படி வரைந்திருக்கிறதோ. நான் வனம் பார்க்க என் மாமிமாரிடம் விடை கேட்க, வேண்டாமென்று தடுத்தார்களே அதையாவது கவனித்தேனு. இல்லையே. ஆனல் இப்படி அழுதுகொண்டிருந்தால் நீரும் இங்கேயேஇருக்கவேண்டி வந்துசேரும் ஐயா. நீர் என் கண்ணீர் வடித்து தரையைப்பார்த்த வண்ணமாய் நிற்கிறீர் உமது அண்ணர் சொன்ன காலம் தவறினல் குற்றமேற்படும். கோபமேற்படும் நீர் சுகமாய் சென்று என் நாதருக்கும் என் மாமியருக்கும் வந்தனமழித்ததாக தெரிவியும். சென்று வாரும்.

லட்சுமணர் பாட்டு ஷை மெட்டு

வாழ்வு குறையுங்காலம்
வந்தது இந்தக் கோலம்
ஞாலம் யேசிடப் பிறந்தேன் அம்மா அம்மா

(வசனம்) தாயே சென்றுவருவாய் என்று தெரிவிக்க மாத்திரத்தில் இச்சண்டாளனுடைய மனம் தடுமாறுகிறது ஐயோ எங்களுடைய குலத்திற்கே நாசகாலமடைய நேரிட்டது. நெஞ்சம் தளருகிறது அம்மா! அம்மா! உலகப்பழி கூறி பாவத்தைச் சுமந்த பாதகன் எவ்வாறு செல்லுவேன் தாயே சென்று வருகிறேன்

(தலையிலடித்தவண்ணமாய் பிறப்
பட்டு தனியாய் புலம்புதல்)

பாட்டு காமி சத்யபாமா என்ற மெட்டு.

நம்பினேரைக் கைவிட்டவன் நானே பாதகன்
பாதகன் பாதகன் பாதகன் (நம்
வெம்பி அழுகுங் கண்ணீர் வீணில் போகாது மண்ணில்
அம்புவியில் காதகன் காதகன் காதகன் (நம்
உத்தமிகளின் பாவம் உலகையழிக்குஞ் சாபம்
எங்கெதியாவேனே சோபம் சோபம் சோபம் (நம்)

(வசனம்) பதிவிரதைகளில் ஒருவராகிய அனுசூயையாலல்லவோ உலகமே இருளடைந்து உத்தமிகளால் மும்மூர்த்திகளும் சிறு குழந்தைகளாய் தொட்டிலில் போட்டு தாலாட்டப்பட்டாரென்று கூறுவார் அப்பேற்பட்ட கற்புடைய தெய்வங்களுக்கு ஆபரணமாயுள்ள என் தாயை நான் இந்தவனத்தில் ஒருவருடைய உதவியுமற்று அலையவிட்டேனே. இந்தப்பாதகம் என்னை எளிதில்விடப் போகிறதா. இல்லை. இல்லை. ஒருவகையில் தேற்றுவார் இங்கு யா

ருளார். என்று யோசித்தால் இவ்வனத்தில் வாழும் மிருகங்களை யன்றி வேறொன்றுமில்லை தெய்வங்காள்!

பாட்டு அயாங்கரோக்கி என்ற மெட்டு.

வனதேவதைகாள் மானினங்காள் வளருங் குயில்காள்
மங்கை எந்தன் அன்னை சீதா
வனத்திலிருக்கிறாள்
பங்கமின்றி காக்க உந்தன் பாதம் பணிந்தேன் (வன

(வசனம்) இவ்வனத்தில் வாழப்பட்ட தெய்வங்காள்! மானினங்காள்! மயிலினங்காள்! அன்னப்பக்ஷிகாள்! உலகமாதாவாகியும் என் அன்னையுமாகிய சீதாதேவியார் முன்னொருக்கால் மூவரோடு பதினான்கு வருடகாலம் வனவாசித்து வந்தாள் இப்பொழுது காலவித்தியாசத்தாலும் தங்களை யெல்லாம் கண்டு களிப்படைய ஆவல் கொண்டவர்களாயும் ஒண்டியாய் கதியற்று துணையற்று பரிதபிக்கிறார்கள் ஆகையால் நீங்கள் யாம்பரும் (திக்கற்றவர்களுக்கு தெய்வந்துணை) என்றபடி தங்கள் உடன் பிறப்பாகவும் தங்களுக்குத் தாயாகவும் நினைத்து மனவருத்தம் அடையுங்கால் தேறுதல் கூறி காப்பாற்றும்படி இப்பாதகனது கோடி நமஸ்காரம். யான் சென்று வருகிறேன். (காக்ஷி முடிவு)

4வது காக்ஷி. வால்மீகிவனம்.

பாத்திரங்கள்:—சீதை, வால்மீகர், இரண்டு சிஷ்யர்கள், மவுனசிகாமணி, துன்மார்க்கசிகாமணி.

சீதை பாட்டு வானவர் போற்றும் என்ற மெட்டு.

சீர்தரும் வாழ்வெல்லாம் போச்சே
தியங்கிநான் வனத்தில் வரலாச்சே
பேர்பெறும் மன்னர்க்கிழிவாச்சே உலகத்தார்
பிதற்றும் பழிப்பேச்சே (சீர்தரு

தோகையறு

நேரிலென்னையார்கண்டு ஆதரிப்பா ரெந்தன்
நெஞ்சநிலை தடுமாறுதே.
நிஷ்டாசனத்திலுறும் தபயோகிகளைக்காண
நினைவுக்கு மதிகூறுதே.

பாட்டு துடர்.

யாருமே காப்பவரில்லையா அபலையா
யலையவிதி நிலையா நான்
பாரிலே இருப்பது தொலையா பாத்யங் கொண்டாள்
வதொரு மலையா (சீர்)

சீதை பக்கத்தில் சேடி மறைவில் அயர்வுற

(வால்மீகி வசனம்) அடே மௌனசிகாமணி துன்மார்க்க சிகாமணி உங்களை நான் புஷ்பங்களெடுத்து வாருங்களடா வென்று தெரிவித்தேனே எடுத்து வந்தீர்களா ஏனடா பேசாதிருக்கிறீர்கள்.

(மௌன வசனம்) தாத்தா மேலண்டை போய் குடலையில் புஷ்பங்கள் எடுத்து வந்தேன் துன்மார்க்கனை காணேம் கீழண்டை வரும் பொழுது ஒரு பெண் அழுகுரல் சப்தம் கேட்கிறது உங்களிடம் சொல்ல வேண்டுமென்று வந்தேன் சுவாமி!

(வால்மீகி வசனம்) அப்படியானல் நாம் அவசியம் கவனிக்க வேண்டும் வாருங்கள் போய் பார்க்கலாம்

வால்மீகி எதிர் தோன்றியவுடன் சீதை நமஸ்காரம் செய்கிருள்

சீதை பாட்டு தயவிலாததேனோ வஞ்சம் என்ற மெட்டு

பல்லவி.

கதிவேறில்லை பெரியோரே எனை
காத்து ரக்ஷிப்பீர் நீரே (கதி)

அனுபல்லவி

விதியினலே வந்த மோசம்
விலகினேன் பதி மதியிழந்தேமே வினைப் பயனெனப் பொருந்திட (கதி)

சரணம்.

ஆதரவில்லை யென அண்டினேன் பேதை
ஐயோ வென்றலறிட ஆச்சுதனாதை
வேதவிமலனே சிந்தாந்தா
வித்தகா துதி சத்யனேநிதி விதரண குண கதி (கதி

(சீதை வசனம்) சுவாமி நான் ஆதரவற்ற ஓர் அனாதை இந்த இடத்தில் தங்களைத்தவிர வேறு கதியில்லை. என் விதிவசத்தால் நான் என் பதியிழந்து இந்தவனத்தில் வரநேர்ந்தது நீரே தெய்வம் நீரே என் தந்தை என்னை காப்பாற்ற வேண்டும் சுவாமி.

(வால்மீகி வசனம்) தாயே நீ எந்த ஊர், உன் பெயர் யாது? நீ யாருடைய வயிற்றில் ஜெனித்தவள்? நீ எதற்கு இங்குவர நேர்ந்தது உன்னைப்பார்த்தால் தெய்வப்பெண்களில் ஒருத்தியாகவன்றோ தோன்றுகிறாய் அம்மா உன் சவிஸ்தாரம் தெரிவி.

சீதை பாட்டு நோண்டிச் சிந்து.

உரைப்பேனே ஊரும் பேரும் சாமி
உத்தமரே கேளும் எந்தன் வரலாரும்

பாரில் அயோத்தியாளும் அந்த
பருதிகுலத்திபராம் தசரதர்க்கு

காரண மானவராம் அவர்க்கு
கருத்துள்ள மைந்தராம் ராமரெனும்

நாரணன் தேவியானும் சுவாமி
நாட்டினில் சீதை யென் றேற்றிடுவார்

வண்ணான் பழிப்புரை அங்கே கேட்டு
வனத்திலெனைவிரட்ட நேர்ந்ததிங்கே

யாருந்துணை யில்லாமல் அலைந்து
மடிபணிந்தேனுமை தள்ளிடாமல்

ஆண்டருள் யோகியரே.

(வசனம்) சுவாமி! என் விதிவசத்தைப்பற்றி யான் எவ்வாறு கூறுவது.

(வால்-வசனம்) தாயே! உலகமாதாவாகிய அன்னையே! சீதா தேவி நான் தங்களை நேரில் சந்தித்தபோதே! என் தவமே சித்தி பெற்றது. அம்மணி! நான் இந்த வனத்திலிருக்கப்பட்ட வால்மீகி ரிஷி நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம் ஹே! லோககாரணி பத்து மதிக்கொப்பாகிய உன் திருமுகப் பிரகாசம் வாட்டமுறவேண் டாம். நீ வனத்தில் தோன்றியவுடன் வறுமையுற்றவன் புதையல் பெற்றதையொத்தேன் அன்றியும் இங்கு வாழப்பட்ட ஜென்மங் கள் யாவும் விமோசனம் கொண்டன யென்பதற்கு சந்தேகமில்லை கண்ணே! உன் வயிற்றில் தரித்திருக்கும் புண்ணிய கர்ப்பத்தில் ஜெனிக்கும் குழந்தை கீர்த்திவாய்ந்து அயோத்தியை ஓர்குடையில் ஆளக்கடவது. தாயே அதோதெரிகிறது என் ஆச்சிரமம் வாருங்கள் செல்வோம்.

(சீதை வசனம்) சுவாமி தங்களைக்கண்ட மாத்திரத்தில் கவலை யென்பதே ஒழிந்தது. என் இடர்களெல்லாம் நசித்துப்போயின. வாருங்கள் ஆச்சிரமஞ் செல்வோம். சுவாமி.

காக்ஷி முடிவு.

3வது அங்கம்.

1-வது காக்ஷி இடம்-வால்மீகி ஆச்சிரமம்.

பாத்திரங்கள்:—வால்மீகர், சீதை, இரண்டு தெய்வப் பெண்கள்.

(சீதை வசனம்) சுவாமி அடியாளுக்கு பூர்ணகர்ப்பமாகையால் பிரசவஅவஸ்த்தை யேற்படும் அப்பொழுது எனக்கு பக்கத் துணைக்குஒருவரும் இல்லை ஆகையால் இரண்டு பெண்கள் உதவி செய்ய அருள்புரியுமாறு கேட்டுக்கொள்கிறேன். சுவாமி

(வால்மீகர் வசனம்) அம்மணி அப்படியே உனக்கு வேண்டிய சிசுரக்ஷை செய்வதற்கு தேவலோகத்திலிருந்து இரண்டு பெண்களை சிருஷ்டித்துத் தருகிறேன் இதோ.

வால்மீகர் பெண்களை உண்டுபண்ணுகிறார்.

தேவமாதர் பாட்டு, மாதுபாகவானவா என்ற மெட்டு

கன்னியெங்கள் வந்தனம் கர்த்தனே தந்தனம்
காரிழைகளை செய்வதென்ன இக்கணம்
நற்காரணனே பரிபூரணனே ஜெககாரணனே
உமைக் கோரினோமே
கார்க்கும் தந்தையாகியே எற்குமே வால்மீகியே
உந்தன்கழலடி பணிந்தேன்

(வசனம்) குருநாதா! நாங்கள் தேவலோகத்திலிருக்க எங்களை அழைத்த காரணம் இன்னதென தெரிவியுங்கள் சுவாமி!

(வால்மீகி வசனம்) மங்களமுண்டாகட்டும் பெண்களே! உங்களை அழைத்த காரணம் சர்வலோகசரண்யனாகிய ஸ்ரீ ராமச்சந்திரனுடைய பத்தினி லோகமாதாவாகிய சீதா தேவியார் இதோ நிற்கிறாள் அந்ததாய் பூர்ண கர்ப்பமாகையால் அவர்களுக்கு அவஸ்தை யேர்படாது சிசுரக்ஷை செய்யுமாறு உங்களை அழைத்தது. கவனிக்க வேண்டியது உங்களைச் சார்ந்தது.

(கன்னி வசனம்) அம்மணி நமஸ்காரம் செய்கிறோம் தாயே.

(சீதா வசனம்) மங்களமுண்டாருக தேவிமார்கள் சந்தோஷம்.

(கன்னிவசனம்) அம்மா நீங்கள் இந்தவனத்தில் வந்திருப்பதாக எண்ணி மனவருத்த மடைய வேண்டாம் நீங்கள் நல்ல புத்திரனைப் பெருவீர் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம் தாயே.

(சீதா வசனம்) அம்மா கன்னிமார்காள் எனக்கோ கெர்ப்ப வேதனை அதிகமாயிருக்கிறது சகிக்கமுடியவில்லை இருந்தாப்போலிருந்து என் அடி வயிற்றில் பிசைந்து பிசைந்தாற்போல் வலிக்கிறது ஐயோ என்னால் சகிக்கக் கூடுதில்லையே.

(கன்னி வசனம்) ஸ்ரீ தேவியாரே நீர் அதற்காக கவலைப்பட வேண்டாம் ஸ்திரிகளாய்ப் பிறந்த எவர்க்கும் பிரசவ உபத்திரவம் ஏற்பட்டே தீருவதியற்கை நம்மையும் நமதன்னையார் பெற்றகாலத்தில் இவ்வித அவஸ்தை கொண்டே இருந்திருக்கிறார்கள் ஆகையால் இதனைப் பெண்கள் ஒவ்வருவரும் அனுபவித்தே தீருதல் வேண்டும் இதற்காகவே நாம் எடுத்துக்கொண்ட ஜென்மம் இது. உரலினுள்ளிருக்கும் நாம் உலக்கடிக்கும் பயந்து முடியுமா? அழுகழுதும் பிள்ளை அவளே பெறல் வேண்டும் என்ற தொப்ப நமக்குற்ற சுகதுக்கத்தை நாம்தானே அடைய வேண்டும் இதற்காக விசனப் படாதிருங்கள் வேண்டியசிகிச்சை செய்து பாதுகார்க்கக்காத்துக் கொண்டிருக்கிறோம்.

சீதை பாட்டு தர்க்கம்.

அந்தமிகுந்தமுகுந்தன் மருகனே வா என்ற மெட்டு

சீதை

தத்தளித் தெந்தன் வயிற்றில் வலிக்குதிப் போது
சகிக்காது தாங்கொணாது

கன்னியர்

தாமதமினி யாகிடாதிது தான் ஜன்ன முகூர்த்தம்
தபகாத்ரம பெரும் பாத்ரம

சீதை தோகையரு

இத்தனைகாலமு மிது போல
வேதனையை ஏற்று நானறிந்திலேனே

கன்னிகள்

பத்து மாதம் நிறையப் பெற்றநிறைப் புத்ர
பாரவலியாகும் தேனே

சீதை

படுக்கையதை நானருகிட இடுப்புவலியது பெருகிட
பாரீர் கன்னிமாரீர் என்னைக்காரீர் (தத்தளி)

(வசனம்) கன்னிமார்களே அடியம்மா! அம்மம்மா! நான் சகிக்கக்கூடுதில்லை ஐயோ! தாங்க ஏலுதில்லையே ஐயோ! ஐயோ! என் உடம்பை பிடியுங்கள் பிராணபதி பிராணபதி இத்துயரமடைய உமது திருவுள்ளம் சம்மதித்ததோ ஐயோ! நாதா நாதா ஹா! அம்மா அம்மா கன்னிமார்காள் என் இடுப்பைப் பிடியுங்கள்.

(கன்னிகள் வசனம்) அம்மா நிதானியுங்கள் நிறைய பத்து மாதமும் உமக்குப் பூர்த்தியானதால் புண்ணிய சிலர் உதயமாகும் முகூர்த்தம் நெருங்கிவிட்டது அதனாலே தான் அப்படி அபார

வேதனையடைகிறீர் கொஞ்சநேரத்தில் சிலர் பிறப்பார் ஆனந்தக் கடலில் விளையாடுவீர் மனதைத் திடப்படுத்தும் அம்மணி நாங்கள் சமீபத்தே இருக்கிறோம்

(சீதை வசனம்) அம்மா! அம்மா!! ரெகுநாதா! ரெகுநாதா உமது கிருபையால் நான் வேதனையில்லாமல் குழந்தையைப் பெறச் செய்பலாகாதா சுவாமி காக்ஷிமுடிவு

2-வது காக்ஷி வால்மீகி ஆச்சிரமம்

பாத்திரங்கள் வால்மீகி சீதை கன்னிமார் குழந்தை பிறந்திருக்கிறதா தெரியப்படுத்துதல்

(கன்னிகள் வசனம்) சுவாமி ஸ்ரீ தேவியாரது வயிற்றிலிருந்து புருஷார்த்த சிலர் உதித்திருக்கிறார் தேவியார் தங்களிடம் தெரிவிக்கச்சொன்னார்.

(வால்மீகி வசனம்) நல்லது நமது ஜென்மம் சாபல்யம் பெற்றோம் நீங்கள் அன்னையார்க்கு வேண்டியதை செய்புங்கள்.

(வால்மீகி ஷி வசனம்) அடா சிஷ்யர்காள் நமது லோககாரணியாகிய சீதா தேவிக்கு குழந்தை பிறந்திருக்கிறது அடடா என்ன அழகு என்ன சௌந்தரியம் பேஷ் அம்மா தேவி சிரஞ்சீவியாக வாழக்கடவன் உன் குழந்தை ஈரேழுபதினாங்குலோகமும் ஏகச்சக்ருதிபதியாக ஓர்குடையின் கீழ் அரசாக்ஷி செய்வான் இன்னவனுக்கு குசனென்று நாமமிட்டு அழையுங்கள் அம்மணிகாள்

(சீதை வசனம்) சுவாமி தங்களுடைய ஆசி பெற்றபின் எங்களுக்கு யாதொரு குறையுமில்லை சுவாமி குழந்தைக்கு கல்வி முதலிய யுத்தப்பயிர்ச்சி குதிரை யேற்றம் யானை யேற்ற முதலிய வித்தைகளை தெளிவாய் உபதேசிப்பது தங்களை சேர்ந்த கடமை சுவாமி

(வால்மீகி வசனம்) தாயே அவ்விஷயத்தைப் பற்றி நீயேன் கவலையடைகின்றாய் என்னைச்சார்ந்த கடமையன்றோ அம்மா நான் நிஷ்டையிலிருக்கபோகிறேன் குழந்தை தொட்டிலில் நித்திரை செய்கிறான் கூடிய சீக்கிரம் ஜலந்திரட்டிக் கொண்டுவா

(சீதை வசனம்) சுவாமி தங்களுடைய உத்திரவு போல் செய்கிறேன்.

வால்மீகி நிஷ்டையிலிருக்கிறார் குழந்தை தொட்டிலிலிருக்க சீதை தண்ணீரெடுக்க போனவள் திரும்பவும் குழந்தையை தூக்கிச் செல்கிறாள்

(சீதை வசனம்) (கொஞ்சதூரம் சென்று யோசனையோடு) என்ன பேதமை நான் தண்ணீரெடுக்க வந்து விட்டேன் சுவாமி

யானவர் கண்ணை மூடி நிஷ்டையிலிருப்பார் மிருக ஜாதிகள் வாழப் பட்ட இடம் குழந்தைக்கு ஆபத்து யேற்படும் நாம் சென்று குழந்தையை எடுத்துக் கொண்டுவந்து விடுவதே நலம்.

குழந்தையை எடுத்து வந்து விடுகிறாள்

வால்மீகர் கண் விழித்து

(வசனம்) அடா மௌன சிகாமணி துன்மார்க்க சிகாமணி அடா சீதையினுடைய குழந்தை தொட்டிலிலிருந்தது காணோமே ஐயோ பாவம்! பரிதாபப்படுவாள், அடா இது யென்ன ஆச்சரியம் பட்டகாலிலே படும் கெட்டகுடியேகெடும் என்றபடி முடிந்தது கஷ்டகாலம்

(மௌனவசனம்) சுவாமி! நான் கண்ணைமூடி காலைத்தூக்கிக் கொண்டு மண்ணும் விண்ணும் ஒன்றாய் பார்த்து நிஷ்டையிலிருந்தேனே எனக்கென்ன தெரியவரும் சுவாமி.

(வால்மீகி வசனம்) அடா துன்மார்க்க சிகாமணி நீ பார்த்தாயடா

(துன் வசனம்) சுவாமி! நான் தலைகீழாய் நின்று சங்கரனைக் காணவேண்டி தவம்செய்து கொண்டிருந்தேன் நான்பார்க்கவேயில்லை.

(வால்மீகி வசனம்) அடா நீங்களோ குருவுக்கு மிஞ்சின சிஷ்யர்கள் சீதாதேவி வந்து குழந்தையை காணோமென்று பரிதாபமடைவாளே என்று கிஞ்சிற்றும் கவலையில்லையே ஆனால் தெர்ப்பை புல் எடு ஒரு குழந்தையை சிருஷ்க்கவேண்டும்

தெர்ப்பைபுல்லை தொட்டிலில் போட்டு
குழந்தையாக சிருஷ்டிக்கிறார்

(சீதை வசனம்) சுவாமி! யான் ஜலமெடுக்க செல்லுங்கால் தாங்கள் நிஷ்டையில் இருந்தீர்கள் குழந்தை நித்திரை பண்ணிக் கொண்டிருந்தான் திரும்பிவந்து குழந்தையை தூக்கிக்கொண்டு போய்விட்டேன் இதோ தொட்டிலில் கிடக்கும் குழந்தை ஏது சுவாமி

வால்மீகிவசனம் அம்மா! நான் பார்க்கும்போது குழந்தை தொட்டிலில் கிடக்கக்காணோம் நீ மிகவும் பரிதாபப்படுவாயென்று இந்தக் குழந்தையை சிருஷ்டித்தேன் இதுவும் உன்னுடைய குழந்தைதான் நீயே வளர்த்துவா.

(சீதை வசனம்) சுவாமி இதுவும் நான் செய்த பாக்யந்தான் இவ்விரு பால்யர்களையுந் தாங்கள் வேத நிபுணர்களாக்க வேண்டியது தங்களைச்சேர்ந்த கடமை.

(வால்-வசனம்) சந்தோஷம் தாயே! வர்ணராஜன் பாதாளத்தில் யாகஞ்செய்யவேண்டி என்னை யழைத்திருக்கிறான் ஆகையால் அவசியம் நான் போகவேண்டும் நான் போய் திரும்பும்வரை நீ இந்தஇரண்டு குழந்தைகளையும் சர்வ ஜாக்கிரதையோடு கவனித்து வரவேண்டியது. நான் கூடிய சீக்கிரம் திரும்புகிறேன்.

காக்ஷி முடிவு.

3வது காக்ஷி இடம் அயோத்தி அரண்மனை.

பாத்திரங்கள்:—ஸ்ரீ ராமரோடு நால்வர் வதிஷ்டர் சேவகன் மற்றுஞ்சிலரோடு அஸ்வமேதயாகஞ்செய்ய பிரயத்தினம் செய்தல்.

ராமர் வசனம் சுவாமி குருநாதா! அடியேன் ஓர்விண்ணப்பம்

(வதி-வசனம்) எதைத் தெரிவித்தபோதிலும் கேட்க சித்தமாக காத்துக்கொண்டிருக்கிறோம்.

ராமர் கந்தார்த்தம்

உத்தமா தவத்தினில் மிகுத்திடும் வதிஷ்டரே
ஒருமை பகர இன்று
இத்தரு சபையறிய எனதிஷ்டமதை யேற்று
இயம்புவீர் விடையில் நன்று

வதிஷ்டர்

அத்தனே அடியவரின் ஆதார கர்த்தனே
அறிவிப்பீ ரின்னதென்று
சித்தமே தேவரீர் திருவுள்ள மகிழுவ்ள
ஸ்திரமதை நினைவு கொண்டு

ராமர் ஷை மெட்டு

திசையெட்டும் புகழ் திக்குவிஜயமே செய்துவர
திகழ் அஸ்வமேதியாகம்
இசைபெறச் செய்து கொடி நாட்டவே இது போது
என்மனங் கொண்ட தாபம்

(வசனம்) நான் வெகுநாளாய் அஸ்வமேதியாகம் செய்ய வேண்டுமென்று அபிப்பிராயப்பட்டு தேவலோகத்திலிருந்து பஞ்சகல்யாணி குதிரையை வரவழைத்து வைத்திருக்கிறேன். ஆனால் தங்களுடைய அனுக்கிரகமும் சுபதினத்தையும் தெரிவிப்பதோடு அதற்கு வேண்டிய சாமக்கிரியையும் சேகரிக்க உத்தரவளிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன் சுவாமி.

(வதிஷ்டர்வசனம்) ராமச்சந்த்ரா! வாஸ்தவம். உன்னுடைய இஷ்டம் போல் அஸ்வமேதயாகஞ் செய்பலாம். ஆனல் ஓர் குறை இருக்கிறது. அது நிறைவேறவேண்டுமானல் உன்னுடைய பத்தினி ஜானகி வேண்டுமல்லவா சீக்கிரம் சென்று அழைத்துவரக் கட்டளை யிடுவாய்.

(ராமர் வசனம்) சுவாமி! என்ன இப்படித் தெரிவிக்கிறீர்கள் வனத்திற்கு அனுப்பிய சீதையை அழைத்துவந்தால் ராஜாதிராஜர்களும் மற்றுமுள்ளோரும் நம்மைக் கேவலமாய் பேசுவார்கள் அதற்கு வேறு உபாயமிருந்தால் தெரிவியுங்கள் சுவாமி!

(வதிஷ்டர் வசனம்) ராமா! இன்னொருஉபாயம் உன்னுடைய பத்தினி ஜானகியைப் போல் தங்கத்தினல் ஓர் உருவம் வார்த்து விக்கிரகத்தை வைத்து யாகத்தை முடிப்போம் அயோத்தி முழுதும் அலங்கரிக்கும்படியும் நாளையத் தினம் காலையில் நமது அரண்மனையில் அஸ்வமேதயாகம் நடப்பதாயும் பறை சாட்டும்படி திட்டஞ் செய்வாய்

(ராமர் வசனம்) அப்படியே உத்திரவு செய்கிறேன் சுவாமி

காக்ஷி முடிவு சபை கலைகிறது

4-வது காக்ஷி

இடம்:—நந்தவனம் யாகசாலை.

பாத்திரங்கள்:—பெருங்கூட்டம், மங்கள கோஷ்டத்டத்தோடு அஸ்வமேதயாகம் நடக்கிறது. குதிரையை அலங்கரித்து வீரபட்டயத்தை கட்டுகிறார்கள்.

(வதிஷ்டர் வசனம்) ராமச்சந்திரா! குதிரையைஅலங்கரித்து வீரபட்டயம் நெற்றியில் கட்டி நான்கு திக்கிலும் போகச்செய்து அதற்குப் பின்னே ரதகெஜ துரகபதாதிகளையும் தலைவனக உன்னுடைய தம்பியாகிய சத்துருக்கனையும் அனுப்பி பார்த்து வரச் சொல்லுவாய்.

(ராமர்வசனம்) அப்படியே. சுவாமி தங்களுடைய திரு வாக்கின்படி வீரபட்டயம் எழுதியாய்விட்டது வாசிக்கிறேன் கவனியுங்கள்

(பட்டயம் வாசித்தல்)

விருத்தம்

ஜெகத்தினில் ஐம்பத்தாறு தேசத்து மன்னர்காண
மகுத்துவம் மிகும் அயோத்தி மகிபனும் ராமச்சந்த்ரன்

இகத்தினில் அஸ்வமேதயாகமே யியற்றலுற்றேன்
பகைத்திடில் யுத்தம்செய்ய பரிவுடன் வருகுவோமே.

(வசனம்) இதனால் ஐம்பத்தாறு தேசத்து அரசர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் அவனி புகழும் அயோத்தியாபுரியை பரிபாலிக்கும் இரவிகுலதிலகலாவண்ய மூர்த்தியாகிய ஸ்ரீராமச்சந்திரன் மண்ணுலகோர் முதல் விண்ணுலகோர் வரை மதிக்கத்தக்க அஸ்வமேதயாகஞ் செய்வதின் நிமித்தியம் இத் தேசியின் கழுத்தில் வீரபட்டயம் எழுதிக் கட்டலாயின இதற்குபின்னால் சத்துரு பயங்கர தனுர்வேதசாஸ்திர ரணரங்கசூரன்சத்துருக்கனும்லாரும் வரலாயினர் வல்லமையுற்றவர்களானால் இத்தேசியை பிடித்துக் கட்டியுத்தம்செய்யலாம் சக்தியற்றவர்களானல் கப்பப்பணம் கட்ட வேண்டியது. இது தான் விஷயம் சுவாமி! தேசியின் கழுத்தில் கட்டவேண்டியது தானே.

[வதி வசனம்] உத்தமமான சமாசாரம் அதன்படியே திட்டம் செய்வாய்.

ராமர் பாட்டு நாடு மிகுநாலு திசை என்ற மெட்டு

சத்துருக்கனு ததி நீ திக்குவிஜயம் புரிய
தக்கனவகுத்த மொழியே
இக்குதிரை விட்டுப் பின் முற்றுமே அறிந்துவர
இசைவாய் நடந்து வழியே

எட்டுதிசை கொற்றவர்கள் கப்பமது கட்டிவர
விட்டுஜெயங்கொட்டி மகிழ்வாய்
திட்டமது தெரியாத துஷ்டர்களெதிர்த்துவிடில்
கொட்டம தடக்கி வருவாய்

யானையொடு சேனைபரிவாரமுதல் நாலுவகை
அணிகளும் வகுத்த நிங்கே
ஆர்ப்பரிந்தோர் புறம் ஏற்படும் செய்திதனை
அறிநதிடு அங்குவிறைந்தே

(வசனம்) சத்துருக்கனு இந்தப் பட்டயத்தை தேசியின் கழுத்தில் கட்டி ரதகஜதுரகபதாதிகளையும் அழைத்துக் கொண்டு போய் நான்குதிக்கிலும் அரிய திக்விஜயம் பண்ணி வருவாய்.

சத்துருக்கன் பாட்டு-

காமசுந்தராங்கி என்ற மெட்டு

தாமதமில்லாது செல்வேன் தாரணிமீதே
தருமரசர்கள் புகுதியேபெற (தா)

தன்மைப்படுமவரவர்மன
வண்மைப்பல மதனையறிய (தா)

தடை செப்பிடு கற்பித முற்றவ
னிட மொப்பிடு யுத்தமுமிட்டிடததி (தா)

ராமனஸ்வமேதயாக
நாட்டிற்கொடி அரசுரிமையை
காட்டி ஜெயமது பெருகிட (தா)

(வசனம்) அப்படியே சென்று வெற்றிக் கொடி நாட்டி வருவேன் அண்ணா நமஸ்காரம்

காக்ஷிமுடிவு — அப்படியே குதிரையுடன் சேனைகளோடுபுறப்பட்டு போகிறார்கள்

5-வது காக்ஷி — இடம்:—வால்மீகி ஆச்சிரமம்

பாத்திரங்கள்:—சீதை குசலவன் வேட்டையாட தன் தாயாரிடம் விடைகேட்குதல்

(குச வசனம்) எங்களை யீன்ற அன்னையே தங்களிடம் ஓர் விண்ணப்பம் செய்ய எத்தனித்தோம் விடைபகரவேண்டும் நாங்கள் இருவரும் இதுநாள்வரை நமது குருவாகிய வால்மீகரிடம் தனுர்வேத சாஸ்திரங்களைக் கற்றோம் இன்றையத்தினம் அதைக் கொண்டு பரிக்ஷிக்க வேண்டியதவசிய மென்று ஆயுதபாணிகளாய் இவ்வனத்தில் சென்று வேட்டையாட வேண்டியதற்கு தாங்கள் தடையிலாது.

பாட்டு மதுர ராணி என்ற மெட்டு

தந்தருள் வீர் விடையிப்போது
தாயே வேட்டையாடி வருக தந்

விந்தையுடன் இருவர் சென்று
விறை வுடனதி துரிதமுடனே
வருமிருகமதனை வதை செய்ய தந்

(வசனம்) தாயே என்ன தெரிவிக்கிறீர்கள் சீக்கிரம் விடை பகரவேண்டும்.

(சீதைவசனம்) நான் பெற்ற செல்வர்காள்! நீங்கள் கேட்பது வாஸ்தவம் ஆனல் சிறுகுழந்தைகள் இதுவரை வேட்டையாடினவர்களல்ல, அன்றியும் மிருகவகை மிகுந்த அடர் வனம், அதைக் கண்டு பயந்து ஓடவேண்டியதிருக்கும். தவிர தங்களைப் போல் வேறு அரசர்கள் வந்து எதிர்த்தால் உங்களால் யுத்தம் செய்ய போதிய வயதில்லை இன்னும் கொஞ்சக்காலம் போகட்டும் கண்மணிகாள்.

(குச வசனம்) தாயே இது என்ன! ஆச்சரியமான வார்த்தை தெரிவிக்கின்றீர்கள் சர்வ உலகமும் மாதா வெனப்புகழும்உங்களுடைய திருஉதரத்தில் ஜெனித்தும் உத்தமவேதப் புனிதனாக விளங்கும் வால்மீகருடைய பூர்ண ஆசி பெற்ற எங்களுக்கு விலங்குகளின் பயமும் உண்டோ? அன்றியும் எங்களுக் கொப்பாகிய ஒரு அரசனுக்குப்புறமுதுகிட்டோடுவது நாங்கள்தானு எங்களை ஜெயிப்பவர்கள் இவ்வுலகிலும் உண்டா எங்களுக்கு கற்பித்த வித்தை வீணு, எங்களுடைய குருவின் மந்திரம் பொய்யா, மந்திரம்பொய்த்து போகுங்காலம், எங்களுடைய வீரச் செயல் குன்றுங்காலம் விண்ணுலகமேது மண்ணுலகமேது, தேவர்களேது. முனிவர்களேது. அம்மா! தங்களுடைய கற்புநிலை மாறி விடில் எங்களுக்குக் குறைவு காலம் ஏற்படு மென்பது நிச்சயம் விடை கொடுத்தனுப்புங்கள் தாயே-

(சீதை வசனம்) அப்பா நான்எவ்வளவு சொல்லியும் பிடிவாதமாய் பேசுகிறீர்கள் ஆனுல் குழந்தைகாள் சுகமாய் வேட்டையாடி திரும்புங்கள்.

குச பாட்டு. வருவாயே வடமாலி என்ற மெட்டில் மகுடத்துடன்

வருவாய் அடா லவனே
வனங்களில் நமக்கெதிர் வரும் விலங்
கினங்களை வதை செய்ய — வரு

வஞ்சித்தே இடர் விளைவதை
இம்சித்தே ஒரு கணை விட — வரு

சரணம்

விந்தையாய் தந்தை வால்மீகர்
முந்தியே உபதேசமே செய்த
தந்திர மந்திர மனதில்
சிந்தையினிலே துதிசெய்ய
வேகமதாகவே சோலையில்
நாமினி வேட்டை களாடிட — வரு

(வசனம்) அடா தம்பி நமது தாயானவர் நாம் சென்று வேட்டையாடி வர விடைகொடுத்தனுப்பி இருக்கிறுர் அஞ்சாது அடுத்த வனம் சென்று வேட்டையாடி வருவோம் வா.

(லவன் வசன்ம்) அண்ணு தங்களுடைய உததிரவை எதிர் பார்த்தேன் இதோபுரப்பட தயார். காக்ஷிமுடிவு

4–வது அங்கம்.

1–வது காக்ஷி. இடம்:—வால்மீகி வனத்திற்கடுத்த வனம்
பாத்திரங்கள்:—குசன் லவன் மற்றும் சில துணையாளர்

(லவன் வசனம்) அண்ணா நம் தாயிடம் விடை பெற்று நமது ஆச்சிரமத்தையும் கடந்து இந்த இடத்தில் வேட்டையாட வந்திருக்கின்றோம் அன்றியும் மிருகங்களின் ஆரபாரம் எங்கும் முழங்குகின்றது ஜாக்கிரதையோடு எதிர் வருகிற மிருகங்களை வதை செய்ய வேண்டும் இதோ புலி ஒன்று நம்மை எதிர்த்து சீற்றங் கொண்டு வருகிறது பாருங்கள்

குசன் பாட்டு சரி சரி சாமுத்ரிகா லக்ஷணம் என்ற மெட்டு

புலியே நீ ஒளியாமலே எதிரில்வந்த
புகளோங்கிய கணையாலுனை எமலோகமேசேர்ப்பேனின்று (பு)

தந்தை உபதேசம் செய்த மந்திரங்கள் வீண் போமா
செந்தமிழ் துலங்கும் ராமசாமி சொல்பழுதாமா
ஜெயவீரர்கள் குசலவனென அறியாமலே வனேடுறாய் (பு)

(வசனம்) தம்பி துஷ்டமிருகங்களில் இப்புலியானது மிகவும் சாமர்த்தியமும் கர்வமுடையதென்றே நினைக்கலாம் பேஷ் என்ன ஆச்சரியம் கொஞ்சமும் நெஞ்சினில் பயமற்று இன்னாரெனத்தெரியாது நமது வனத்தில் தானே நம்மை எதிர்த்துவந்தால் நம்மாலிடப்பட்ட ஒரு கணைக்கு மறுகணையுண்டா வீறிட்டு கீழே விழுந்தது. அதோவருகிற மிருகம் இன்னதென கவனி.

லவன் பாட்டு ரேகு வம்ச சுதா என்ற மெட்டு

பல்லவி

பன்றியோடுது குன்றின் அருகே
கண்டு பயந்துமே கார்க்க உயிர் கொண்டு (ப)

அனுபல்லவி.

நின்றுயேவுவேன் கொண்ட ஓர் கணை
விண்டலமும் கிடு கிடென விடுவேனே (ப)

(வசனம்) அண்ணா முன் காலத்தில் இரண்யனுடைய தம்பியாகிய இரணியாக்ஷதன் உலகத்தை பாயாகச்சுருட்டி பாதாளத்தில் அமிழ்த்த பன்றி பூமியை துளைத்து அவ் விராக்ஷதனை கொன்றது என்றுகேள்விப்பட்டோமல்லவா அப்பேர்ப்பட்டவல்லமை வாய்ந்த பன்றியினினத்தை என் அஸ்திரத்தால் கொன்று கீழே வீழ்த்தினேன் அதோ பார்த்தீர்களா. இன்னும் யுகாந்தகால இடிபோல் கர்ஜனை செய்து கொண்டு ஓர் மிருகம் நம்மைக்கண்டு தன்னுயிரை காப்பாற்றிக் கொள்ள பார்க்கிறது ஜாக்கிரதை.

குசன் பாட்டு காட்டைக்கலைத்து விடடா என்ற மெட்டு

சிங்கமே நீ எங்கு ஓடுறாய் பொல்லாத துஷ்ட சிங்
கங்கணங் கட்டி நாங்கள் இங்குவந்தோமே உங்க

ளினங்களை கொள்வதென்று முழங்குதே
வில்விலே தொனி சிங்

(வசனம்) தம்பி மிருகங்களுக் கெல்லாம் அரசனாக நாம் இவ்வனத்தில் வாசம் செய்கிறோம் நம்மை கொல்வதற்கு உலகில் ஒரு அரசன் இருப்பானா என்று மமதை கொண்டு வந்த சிங்கத்தின் கெதியை நோக்குங்கால் தன்னைத்தானே புகழ்ந்து மகிழ்வடையும் அற்பருக் கொப்பாகும். நாம் தன் கெற்வமடைந்த மிருகங்களையும் மனிதர்களையும் கொல்வதெனத் தோன்றி கங்கணம் கையிற் பூண்டும் மீண்டு மிவ்வில்லை கையில் ஏந்தி இவ்வனத்தில்நிற்கிறோமெனத் தோன்றவில்லைபோலும் ஆனால் இன்னும் கார் கொண்ட மேகத்திற் கொப்பாகிய ஓர் மிருகம் வருகிறது உன் வில்லின் வல்லமையை அதற்கு காட்டுபார்க்கலாம்.

லவன் பாட்டு, அடுபோரறிந்திடுமா ரேம என்ற மெட்டு

மதமேறிய கரியேயுனை கணையாலிதோ எய்வேன்
மதியாமலே எதிரேவர மாளுதுயிர் கொய்வேன்
பல வீரர்கள் இருபாலர்கள் பகருஞ்ஜெயம் ஜெயமே
குலமாமணி எனவேபுகழ் கொண்டோமதி நயமே

(வசனம்) அண்ணா பருவதத்திற் கொப்பாகிய இந்த யானை முன்னொருக்கால் தண்ணீரில் கிடந்த முதலைவாயில் அகப்பட்டு ஆதாவற்று ஆதிமூலமென்று ஓல மிட்டு ஈஸ்வரனால் காப்பாற்றப்பட்டதென்பது இதிகாசமுறை. மேலும் அத்துன்பத்தை யோசியாது நமது சரீர பெருமையே பெருமை யென்றும் நம் உயிர்நிலையை அறியக் கடவன் யாவன் உளான் என்று நினைத்து நம்மை சிறுவர்களென்றுமதித்து எதிர்த்து வந்து தன் உயிர் நீக்கியது. ஆனால் இன்னும் ஏதேனும் மிருகங்கள் வருமென்றாலும் வரவில்லை நாம் வேட்டையாடிய களைப்பதிகமாயிருக்கிறது சற்று இம்மரத்து நிழலில் இளைப்பாறி செல்லலாம்.

(குச வசனம்) தம்பி நாம் வந்து வெகு நேரமாகிறது நம்மை விட்டு பிரிந்திருக்கச் சகியாதநமது தாய் நம்வரவை எதிர்பார்த்திருப்பார் ஆகையால் சீக்கிறம்போக வேண்டும்.

(லவ வசனம்) அண்ணா நீர் செல்லும நான் சற்று இம்மரத்து நிழலில் தங்கி வெய்யவன் தணியும் சமயம் இன்னும் இங்குள்ள மிருகங்களை அதம் செய்து திரும்புகிறேன் அண்ணா.

(குச வசனம்) தம்பி அப்படியானால் நான் செல்லுகிறேன் நீ தாமதிக்காது விரைவில் வந்து சேருவாய்.

(லவ வசனம்) உத்தரவு சென்றுவாருங்கள்.

லவன் அம்மரத்தடியில் மண்ணை தலையணையாய் குவித்து சயனித்துக் கொண்டிருக்கிறான் அந்தசமயம் குதிரைவருகிறது அதைக்கண்டு ஆச்சரியப்படுகிறான்.

(லவ வசனம்) இது யென்ன ஆச்சரியம் இது நேரம்வரை துஷ்டமிருகங்களை வதைசெய்து அயற்வுற்று இம்மரத்தின் கீழ் அமர்ந்தோம் ஆனால் இதைநோக்குங்கால் மிருகமாகத் தோற்றவில்லை தெய்வலோகவாசிகள் வைத்திருக்கும் புரவியாக வன்றோ தோன்றுகிறது அநேக வித ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு வீரகெண்டைகள் அணியப்பட்டும் தன்கழுத்தில் ஓர்பட்டயமும் தொங்குகின்றது ஆனால் அதைப்பிடித்து நிறுத்தி அதில் எழுதப் பட்ட விஷயம் இன்னதென தெளிவுறக்காணலாம்.

சமீபம்சென்று பிடித்து பட்டயத்தில் எழுதப் பெற்றதை வாசித்தல்

இது யென்ன புதுமை (சிறித்துக்கொண்டு) அகிலமே துதிக்கும் அயோத்தியாபுரியை அரசு புரியும் ரெவிகுலதிலகலாவண்ய ஸ்ரீ ராமச்சந்தர மூர்த்தி அஸ்வமேத யாகத்தை பூர்த்திபண்ணி இந்த அஸ்வத்தை அலங்கரித்து இதன் கழுத்தில் இப்பட்டயம் கட்டியனுப்பலுற்றேன். இதைப்பிடித்து கட்டினவர்கள் இதற்கு பின்னால் தனுர் வேத சாஸ்திர ரணரங்க சூரன் சத்துருக்கன் சேனை சைன்யத்தோடு வருகிறார் அவர்களோடு யுத்தம் செய்து ஜெயிக்கவேண்டும் இல்லையேல் கப்பப்பணம் கட்டவேண்டுமாம் இது யென்ன சாமர்த்தியம் அப்படி சாமர்த்தியத்தை கைக்கொண்டமடையர்களுடைய குதிரை நமது வனத்திற்கு வருவானேன் இக்குதிரையைப் பிடித்து வாழைமரத்தடியில் கட்டுவிக்கிறேன் பின்னால் வரக்கூடியவர்கள் வரட்டும் பேசிக்கொள்வோம்.

மறுபடியும் படுத்துக் கொள்ளுகிறான். குதிரை கட்டியிருப்பதை சத்துருக்கனர் கண்டு ஆச்சரியப்படுகிறார்கள்.

சத்து வசனம்) சேனைத்தலைவர்காள்! இது யென்ன விபரீத காலம் ஐம்பத்தாறு தேசத்தைச் சுற்றி வந்தும் நமது குதிரையை பிடித்து கட்டினவரும் இல்லை, நம்மையெதிர்த்தாரு மில்லை, இந்த வனத்தில் எவனோ கட்டியிருக்கிறான் இதுயென்ன ஆச்சரியம்! நமது குதிரையைக் கட்டினவன் இன்னவனெனத் தெரியவில்லை இவ்வனத்தில்தானே இருக்கவேண்டும் சற்று கவனியுங்கள் பேஷ்! இதோசயனித்துக்கொண்டிருக்கும் இச்சிறு பயனாகத்தானிருக்கலாம் அடே பயலே என் இக்குதிரையைப் பிடித்துக்கட்டினாய் நீ

தானா வேறு யாருகினுமா வேடிக்கையாகக் கட்டிவைத்தாயா விஷயம் தெரிந்தே இக்காரியம் செய்யத் துணிந்தனையா.

[லவ வ-ம்) அடே நான்தான் இக்குதிரையைப் பிடித்துக் கட்டினேன் நீ வேடிக்கையாக இப்பட்டயத்தைக்கட்டி அனுப்பியிருந்தால் நான் பிடித்துக் கட்டினது வேடிக்கையென்று நினைத்துக் கொள், வாஸ்தவமான காரிய மென்றால் நான் செய்ததும் வாஸ்தவமே:

சத்துருக்கனன் பாட்டு. அடடா எமதூதர்களே என்ற மெட்டு

மன்னவன் குதிரையை திண்ணமாய்க்கட்டின
சின்னப்பயலே இங்காரடா நீ
இன்னமு மேனடா வாய் திரவாமலே
எதிர்த்து நிற்கிறாய் கூறடா நீ (ம)

[சத்- வ-ம்] அடா சிறுபயலே! இன்னாரால் இயற்றப்பட்ட காரியம் இதனால் இவ்வளவு நன்மையுண்டு தீமையுண்டென்று தெரிந்து கொள்ளாது, முன்பின் யோசியாது இக்காரியம் செய்யத் துணிந்தனையே. என்ன தைரியம், நீ எந்த ஊர்? உன்னுடைய பெயர் யாது? இவ் வனத்தில் வந்துநிற்க காரணம் யாது? சீக்கிரம் தெரிவி.

லவன் பாட்டு ஷை மெட்டு.

மன்னவன் குதிரை யென்றா லெனக்கென்ன
மகிபனே லவன் நான் கட்டினவன்
பின்னமாய் எழுதிய பட்டயமதனை
பேரோங்கிடக் கைப்பற்றினவன் (ம)

(வசனம்) அடே தன்னைப் புகழ்ந்தவன் பதரென்றல்லோ கூறுவார்கள் யாருடைய குதிரையாய் யிருந்தாலென்ன நான் தான் கட்டினவன் உன்னாலென்ன செய்யக்கூடும்? ஒருவனுடைய புகழ் ஓங்கவேண்டுமானால் குதிரையின் கழுத்தில் எழுதிக் கட்டுவானேன் எதிர்த்து சண்டை செய்யவேண்டியே பிடித்துக் கட்டினேன்

சத்துருக்கனன் பாட்டு ஷை மெட்டு.

உன்னுயிர் தரிக்க ஒரு வழி தேடு
ஓடிடு இல்லையேல் வரும் பெருங்கேடு
நண்ணியே ஜலதியில் இருப்பிடம் நாடு
நமனுலகேகிட நினைக்காதே பாடு (உ)

(வசனம்) அடே! நீயோ சின்னப்பயல். என் வீணில் உயிரை மாய்த்துக்கொள்ளுகிறாய் குதிரையை அவிழ்த்துவிட்டு உன்னிருப்பிடம் சேரு இல்லையேல் க்ஷணநேரத்தில் பெரும் ஆபத்துக்கு ஆளாவாய் தப்பித்து ஓடிப்போ.

லவன் பாட்டு. ஷை மெட்டு

வீணில் வாதாடாதே நீயெதிர் நில்லு
விளம்பரமிடுவதில் கீர்த்தியோ சொல்லு
நானெனு மமதை கொண்டாடாதே செல்லு
நாமிருவர் சமர் செய்குவோம் மல்லு (வீ

(லவன் வசனம்) அடே உபதேச வார்த்தைகள் வீணில் பேசவேண்டாம் உனக்கு சாமர்த்தியம் இருக்குமென்றால் என்னோடு எதிர்த்து சண்டை செய்து ஜெயிக்கலாம் இல்லையென்றால் எனக்கு மூன்று முறை தண்டம் சமர்ப்பித்து செல்லவேண்டும் என்ன தெரிவிக்கிறாய்?

சத் பாட்டு அப்படியுமவள் என்ற மெட்டு.

சீ சீ பதில்மொழி பேசாதே
சின்னப்பயலே நீ வீசாதே
போ போ எதிரினில் யேசாதே
புல்லனே உன் தலை தப்பாதே

அடா புறப்படு இப்போதே சொல்லும்
புத்தியை மறுக்காதே (சீ சீ

(வசனம்) அடே சின்னக்குழந்தையென்று உன்னை மன்னித்தேன். ஆனால் இலகுவில் உன்னுயிர் தப்பிப்பதாய் நீ நினைக்கவில்லை வேண்டாம் மரியாதையாய் குதிரையைவிட்டு உன்னுடைய இருப்பிடம் சென்றுவா நான் சொல்லும் புத்தியைக்கேள்.

லவன் பாட்டு ஷை மெட்டு.

உனக்கெதிரில்லை யென நினைக்காதே
உதைவிழும் ஜாக்ரதை உடல்மீதே
எனக்கு நீ அடிமையாவதுந்தோதே
இல்லையேலென் சின மாறாதே

எழுந்து நீ ஓடாதே என்னுடன்
எதிர்த்து வாதாடாதே (உன

(வசனம்) என்னைச் சிறு குழந்தை யென்று தாக்ஷண்யம் பாராட்டவேண்டாம் உலகினில் யாவரையும் எளிதில் நினைத்துத் தானே குதிரைக்கு பட்டயங்கட்டி அனுப்பினீர்கள் பேஷ்! வா யுத்தம் செய்து பார்க்கலாம் உங்கள் புஜபலத்தை.

சத்—பாட்டு நம்பிக்கை கொண்டெல்லோரும் என்ற மெட்டு

உனை யார் பெற்ருரென் கையில் பட்டழியப்போகிருய்
அழியப்போகிருய் வீண்வழியிற் சாகிருய். உனை

அய்யயோ இது பரிதாபம் ஆருதே மனச் சோபம்
இனி அரைநொடிதனி லுனதிடமனு கிலே வரும்
அடங்காதே கோபம் உனை

(வசனம்) அடே திரும்பவும் ஏதோ உளருகிருய் உனக்கு எவ்வளவு புத்திமதியைக் கூறியும் சின்னத்தனமாய்ப் பேசலுற்ருய் உன்னேடு சண்டை செய்தால் என்னை இவ்வுலகமதிக்குமோ என்னைபபோல் சமநிலைமை யுடையவனிருந்தால் நான் யுத்தம் செய்து ஜெயிக்கலாம் அடே கடோசி முறை தெரிவிக்கிறேன் தப்பித்துக் கொள் இல்லையேல் மடிவாய். என்ன தெரிவிக்கிருய்?

லவன் பாட்டு ஷை மெட்டு.

பெரும் வம்புக்கென்முன் னின்றே பழமொழி
வார்த்தை சொல்லாதே
மடவார்த்தை சொல்லாதே இடரேற்றுக்கொள்ளாதே (வம்
தெம்பினுல் உடலழியாதே உன்
திறமை முழுதும் பகாதே என்
திடமனு கிடுமுன தடமது கெடுபட செய்வேனிப்போதே (பெ

(வசனம்) ஹே! ஊனுற்கொழுத்த தடிமடையா உன் சரீரம் பூரித்திருந்தாலும் நீண்டு வளர்ந்திருந்தாலும் என்ன? உதிகைமரம் பருத்திருந்தாலும் ஒன்றுக்குமாகாததுபோல் உன்னுலென்ன செய்ய முடியுமென்று தன்னைத்தானே புகழ்ந்து கொள்கிருய் நீ ஒரு ஆண்பிள்ளையானுல் எடுவில்லை இச்சிறுவனை நானே உனது கொட்டமடக்குகிறேன் வா, சீக்கிரம் யார் வந்தாலும் சரி.

(சத் வசனம்) நல்லது பயலே நண்டு கொழுத்தால் வலையை விட்டு வெளிவந்து மடிவதுபோல் நீ உன் அகம் துறந்தது எங்களிடம் சிக்கி மடியப்போலும் யாரடா சேனையர்கள் பிடித்துக் கட்டுங்கள் இவனைத் தேர்க்காலில்.

(சேனைகள் வசனம்) தேவ தேவா உத்திரவு போல். பஜாவ் பஜாவ், யாரடா பொடியன்?

(லவன் வசனம்) ஒகோ! மல்யுத்தமா சரி நில் பஜாவ்.
ஹா! ஹா! என்னை யீன்ற தாயே! நான் இப்பாவிகளிடம் அகப்பட்டேன். அண்ணு! அண்ணு! (தன் துணையாளனைப் பார்த்து) அடே இதனை என் தாயிடம் வேகமாய் சென்று தெரிவிப்பாய்.

லவனைத் தேர்க்காலில் கட்டி ரதத்தை நடத்துகிருர்கள்.

(சத் வசனம்) பேஷ்! பேஷ்! ரதத்தை நடத்துங்கள் இவனுக்காகப்பின் யார் வந்தாலும் பார்க்கலாம்

காக்ஷி முடிவு

2வது காக்ஷி. இடம் வால்மீகி ஆச்சிரமம்.

பாத்திரங்கள்:—சீதை குசன் தலைவன்வந்து சேதியுரைத்தல்.

(சீதை வசனம்) அப்பா யேன் ஒண்டியாய் வந்தாய் என் அருமை குழந்தை லவன் எங்கேயப்பா? யாது விசேஷம்.

(தலை வசனம்) அம்மா நான் என்ன தெரிவிக்கப்போகிறேன் நாங்கள் ஓர் மரத்தடியில் இருந்தோம் அப்பொழுது ஒரு அசுவமானது அந்த மார்க்கம் வந்தது நமது லவன் அதைப் பிடித்து கட்டிவைத்தார். அதன்பின்பு சேனைகளோடு ஒரு அரசன் வந்து நமது லவனை தேரில் கட்டிக்கொண்டு போகிறார்கள் தாயே

(சீதை) ஐயோ தெய்வமே! பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும் யென்றபடி வந்து முடிந்தது.

பாட்டு ஐயோ என் ஜானகியே என்ற மெட்டு,

ஆகா எந்தன் மகனே
ஐயோ எந்தன் மகனே
அவதிப்படவும் விட்டாயோ தெய்வமே-தெ-தெ

எப்படி மனந் துணிந்து
என் னுயிர் தரிப்பேண்டா
கப்பிய விதிவசமோ மகனே—ம—ம

எட்டுத்திசைகளிலும்
ஈடல்ல என்றிருந்தேன்
கட்டுப்படவும் காலமா அடா மகனே—ம—ம

(சீதை வசனம்) அடா செல்வமே நான் கொடிய பாவியிலும் பாவி சண்டாளி. ஒளி மழுங்கினவனுக்கு நேத்திரம் பிரகாசித்ததைப்போலவும் தாரித்ரத்தையுடையவனுக்கு புதையல் கிடைத்ததை போலும் நான் தங்களைப்பெற்றபின் எனக்கு ஒரு குறைவுமில்லையென்று இருந்தேன் நீங்கள் அயோத்தியில் சென்று அரசு புரிவீர்களென்று சந்தோஷங்கொண்டேன். ஐயோ நான் இனி எத் துயரத்தை நினைத்து அழுவேன் அன்றியும் நீங்கள் வேட்டைக்குப் போக வேண்டுமென்று விடை கேட்கும்போது வேண்டாமென்று மறுத்தேனே அதையாவது கவனித்தீர்களா நமது தந்தையான வால்மீகர் வந்து லவனெங்கேயென்றால் நான் என்ன பதில் சொல்லுவேன் ஒரு குதிரைக்காகக்கட்டுப்பட்டு போனால் இனி யென்

செய்வது என் தலையில் இப்படியும் ஈசன் எழுதினனே. திக்கற்ற அனாதைகளுக்கு தெய்வந்துணைசெய்யுமென்பார்களே அது என் வகையிற் பொய்த்ததா உங்களையன்றி எனக்கு யாரு கதி யிருக்கிறார்கள் எவரிடஞ்சொல்லி அழுவேன்.

(குச வசனம்) தாயே என்னபேதமை! ஏன் இப்படி புலம்பித் தவிக்கிறீர்கள் அம்மா நான் இருக்க தாங்கள் ஏன் வருத்த மடைய வேண்டும் எனக்கு விடை கொடுத்தால் க்ஷணநேரத்தில் எனது தம்பியை மீட்டிக்கொள்வதோடு அவனுடைய சேனைசைன்யங்களையும் கொன்று அதம் செய்து வருவேன் சீக்கிரம் விடை கொடுக்க வேண்டும் தாயே.

பாட்டு மத்தியமாபதி ருகம் தாளம் ரூபகம்.

தாயே விடை நீ யருள்வாய்
என் தம்பியை மீட்டி நான் உன்பலமேமற்றிட (தா
சேயேனெனை எதிர்த்தோரை ஜெயித்துநான்
திறமுடனே வருகுவேனறை கொடிதனிலிமோதரவிறைவின் (தா

(வசனம்) அம்மா தாங்கள் தற்சமயம் ஒருவித பதில் முகாந்தரமும் சொல்லலாகாது இதுசமயம் மறுக்கவும் கூடாது நான் ஓர் வீரபுருஷன் உண்மையான தாயின் வயிற்றில் ஜெனித்தவன் களங்கமற்ற குருவின் ஆசி பெற்றவனென்றால் நான் யேவும் ஒருகணைக்கு சப்தலோகமும் தப்புவிக்குமா ஒன்றுக்கு மயங்கவேண்டாம் எனக்குநல்லஆசிகூறி அனுப்புங்கள் அம்மா! அம்மா!! என்னை தங்களுடைய திருநேத்திரத்தால் நிமிர்ந்து பாருங்கள் ஒரு வார்த்தை கூறுங்கள். யுத்த சன்னதனாய் நிற்கிறேன் வலது புஜம் துடிக்கிறது ஜெயம் ஜெயமென்று ஆரபாரமெங்கு முழங்கும்படி இரு இமை தட்டி விழிக்குமுன் மூவரானாலும் எத்தேவரானாலும் கசக்கி ஊதிவிட்டு என்னரும் தம்பியையும் மீட்டி தம்மினது சமுகம் வந்து சேருகிறேன் தாயே ஆசீர்வதிக்கவேண்டும்

(சீதை வசனம்)அடா குழந்தாய் மும்மூர்த்திகள் வந்தெதிர்த்தாலும் எப்பேற்பட்ட அசுரர்கள் சண்டை செய்தாலும் மண்டலாதிபதியாகிய அரசர்கள் வந்து எதிர்த்தாலும் நான் பதிவிரதையானால் நான் கொடுக்கிற இந்த அஸ்திரத்தால் எதிரிகளை கண்டிக்க வேண்டும் இதோ பெற்றுக்கொண்டு ஜல்தியில் உன் தம்பியை மீட்டி வருவாய்.

[குச வசனம்] அம்மா தங்களுடைய பூர்ண ஆசி பெற்றபின் எனை இனி யார் எதிர்க்கக்கூடும்? க்ஷணநேரத்தில் என் தம்பியை மீட்டி வருவேன். சென்று வருகிறேன்,

(சீதைவ-ம்) திரிபுவன தேவரையும் ஜெயித்துவரக் கடவாய். செல்வமே சென்று வருவாய்.

[குச வசனம்] அம்மா இதோ ஜெயம்பெற்று வருகிறேன்.
குசன் செல்கிறான்.

காக்ஷி முடிவு.

3வது காக்ஷி இடம் அடுத்தவனம் யுத்தகளம்

பாத்திரங்கள்:—குசன் லவன், ராமர் லக்ஷ்மணர் பரதர் சத்துருக்கனன், மற்றுமுள்ள சேனை சைன்யங்களோடு யுத்தம்.

குசன் பாட்டு அடாணா ரூகம் மார்க்கத்தில் கண்ட என்றமெட்டு.

யாரடா இந்த வனத்தினில் வந்தவன்
அறிவிலியே மடையா உந்தன்
ஆண்மைத்தனத்தை எனக்கெதிர் காட்டுவாய்
அரசனென்றால் விடையா
சேனைகளோடு நான் போர் புரிவதற்கு
சித்தத்துடன் வைத்திக்கணை யுத்தப்பரிமிக்கச்செய்வேன். (யா

சிறுவனென்று தேரில்கட்டி வந்தாயே
ஜெயிக்க முடிந்திடுமோ என்னை
சீற்றங்கொண்டாயடா கட்டவிழ்த்துவிடேன்
சேதியறியாயோடா
சர்வ உலக மெதிர்த்தாலு மோர்கணையில்
சாதிப்பேன் க்ஷணப் பொழுதில் சேதிப்பேன்
தெரிவாயடா நீ [யா

[வசனம்]அடே ! நீதானா என் தம்பியை ரதத்தில் கட்டிவந்தவன் மரியாதையாய் அவிழ்த்துவிடு. நீ வீரபுருஷன் என்றாலும் க்ஷத்திரியருக்குரிய மனு சாஸ்திரந்தெரிந்துள்ளவனா யிருந்தால் அந்த இடத்தை விட்டு அகலாது அவனோடு யுத்தஞ்செய்து ஜெயித்திருக்கவேண்டும். அவனைப்பிடித்து தேரில் கட்டுவதில் சாமர்த்தியமோ உன்னோடு வந்த சேனைகள் இவ்வளவுதானா ? இன்னும் இருக்கிறதா? இருப்பதென்றால் அவர்களையும் அழைத்துவந்து யுத்தத்தில் நிறுத்து. இல்லையேல், நான் யேவும் இந்த ஒரு அஸ்திரத்திற்கு இரை காணாது என்று சொல்லுவேன். என்ன பதில் பகராதுயோசிக்கிறீர்கள்? ஜல்திவாருங்கள், யுத்தத்திற்கு வருகிறீர்களா? லவனையும் குதிரையையும் விட்டு திரும்புகிறீர்களா?

[சத்வசனம்] அடே சின்னப்பயலே! நீதானா எங்களது சேனைகளை அழிப்பவன் எங்களைக் கொல்வதற்கு உன்னாலாகுமா மரியாதையாய் சென்றுவிடு.

பாட்டு கபரதரகா என்ற மெட்டு.

போடா பொடியா போக்கிரிப்பயலே எட்டி (போ

வாடா உனக்கு எதிர் வையகத்திலில்லையடா

மூடா உயிர் துலைக்க வோடா இங்கு வந்தனை (போ

[வசனம்] அடே நீயோ சிறுவயதுள்ளவனென்று நினைக்க கொட்டினால் தேள் இல்லையென்றால் பிள்ளைப்பூச்சி யெனும் பழமொழிபோலாயிற்று ஏதோ உலகத்தில் உனக்கெதிரில்லையென்று நினைத்து உளராதே மரியாதையாய் சென்றுவிடு இல்லையேல் உயிர் போவது நிச்சயம்.

குசன் பாட்டு ஷை மெட்டு.

யாரென்றறிந்தாய் அச்சமில்லாமலே நீ (யா

தீரன் குசலவனென தெரிந்ததும் இல்லையா

திண்டாடும் தலை ரெண்டாகுமறி வுண்டா மடையா. (யா

(குச வசனம்) அடே இன்னாரெனத் தெரியாது வாதாடுகின்றனை உங்களைப்போல் வம்பனுக்கு வம்பன் வையகத்திலிருப்பானெனத் தெரியாது குதிரையை அனுப்பி வைத்தீர்களே உங்களைப்போல மமதை கொண்டவர்கள் உலகத்தில் யாரிருப்பார் வெட்டித்தனமான வார்த்தை வேண்டாம் யுத்தம் தொடங்கு பார்ப்போம்

[ராமர் வசனம்] தம்பி லக்ஷுமணா! இது யென்ன வேடிக்கை அந்தச் சிறு பயலும் சத்துருக்கனும் சச்சரவிட்டுக் கொண்டிருக்க நாம் ஒன்றும் கவனியாது இருந்தால் எப்படியாகும் அச்சிறுவர்களை பார்க்கும்பொழுது அவர்களும் ஒரு க்ஷத்திரிய வம்சத்தை சேர்ந்தவர்களென்றே தோன்றுகிறது இல்லையேல் இவ்வளவு வீரச்செயலேது எப்பொழுதும் எதிரியை அசடனென நினைத்தல் தகாத காரியம் அவனை யாரெனவிசாரித்து சண்டைசெய்து முடி.

(லட்சுமணர் வ-ம்) அண்ணா வாஸ்தவமான காரியம் அவனுக்கு வீரச்செயலில்லையென்றால் நமது குதிரையைப் பிடித்துக் கட்டுவானா? விசாரித்து பார்க்கிறேன்.

பாட்டு தீர்த்தயாத்திரை என்ற காவடிச்சிந்து மெட்டு,

தந்தைதாய் பெயரை எந்தனிடம் சொல்லி

தப்பிக்க நீ வழி தேடு அதை ஒப்பாவிடில் வருங்கேடு

வெகு சாதனைக்குறி யேது இப்படி வாதனை புரியா தினியெதிர்

சங்கடங்கள் வந்து நேரும் எம

சண்டனுலகுயிர் சேரும். (தந்

(வசனம்) அடே சிறுவர்காள் உங்களைப்பார்த்தால் நல்லகுலத்தவர்கள் போல் தெரிகிறது உங்களது பெற்றோர்களுடைய நாமம் யாது? உங்கள் இருப்பிடம் எது? எங்களுக்கு விபரமாய் சொல்லி தப்பித்துப்போய் பிழையுங்கள்.

குசன் பாட்டு ஷை மெட்டு

வாயாடித்தனமாய் பேசி முன் நிற்காதே
வந்து யெனக்கெதிர் நில்லு அன்றி
வார்த்தைக்கு நேர் பதில் சொல்லு பொல்லா
வம்பனென்று நீ தெம்புரைத்தனை
நம்புவாரில்லை ஜம்பவத்தினில்
வாதுகள் செய்யாதேபாரும் ததி சேதிக்கிறேன் தலைநேராய் (வா

(குச வசனம்) அடே நாங்கள் யாராயிருந்தாலென்ன எங்களைப்பெற்றவர்கள் யாராலுைந்தாலென்ன நீங்கள் எதற்கு அந்தக்கேள்வி கேட்கிறீர்கள் படுகளத்தில் ஒப்பாரி வேண்டாம் ஜல்தியில் சண்டை செய்து பார்

(லட்சு-ர் வசனம்) அடே வீணில் மடியவேண்டாம் சண்டை செய்தேதான் தீரவேண்டுமோ ஜல்தி பார்க்கலாம் பஜா.

யுத்தம் நடக்கிறது ஓரே பாணத்தால் குசன்யாவரையும் கொன்று விடுகிறான் பின்னால் அவர்களுடைய ஆபரணங்களையும் கிரீடங்களையும் பார்த்து ஆசைகொண்டு அதை எடுத்துச் செல்வதென்று தீர்மானிக்கிறார்கள்.

[குச வசனம்] தம்பி பார்த்தனையா ஒரு பாணத்தில் நமது எதிரிகள் அனைவரும் உடம் என்ற சப்தமாவது வெளிவிடாமல் உயிர் விட்டார்கள் இப்பொழுதே உன்னை விடுவித்தேன் தம்பி லவனே.

(லவ வசனம்) அண்ணா இப்பொழுது நீர் செய்த யுத்தத்தின் பெருமையை விண்ணாட்டினும் மெச்சிடாதிராரென்றே நினைக்கிறேன், அண்ணா! இந்த அஸ்திரம் எது உமக்கு?

(குச வசனம்) தம்பி! நமது தாய் அவரது சக்தியாலுண்டாக்கியதும் அருள் பொலிந்ததுமாக ஆசிர்வதித்து தந்ததாகும்

(லவ வசனம்) அண்ணா! நானும் அப்படியே நினைத்தேன்

சரி இனி நமதன்னைபாரிடம் தாமதியாமல் போகலாம் வாருங்கள்

[குச வசனம்] தம்பி! இந்த கிரீடங்களைப் பார்த்தால் என்ன அழகு இதை நமது ஆச்சிரமத்திற்கு கொண்டு போகவேண்டும்

இதற்கு என்ன யோசனை செய்கிறது. அதோ பார் திருட்டுவிழி விழித்து பிரேதங்களை மேலே மூடப்பட்டு கிடக்கிறதே குரங்குகள். அதை இழுத்துவருகிறேன் அதன் தலையில்சுமத்திக்கொண்டு போகவேண்டும் ஏ குரங்கே இங்கே வாருங்கள்.

காக்ஷி முடிவு

அனுமானும் விபீஷணரும் வாய் பேசாது சிறுவர்கள் இஷ்டம் போல் தலையில் கிரீடங்கள் ஆபரணங்கள் சுமத்திக்கொண்டுபோய் தாயாரிடம் சொல்லல்.

4வது காக்ஷி — இடம் வால்மீகர் ஆச்சிரமம்

பாத்திரங்கள்:— குசலவன் சீதை அனுமார் மற்றுஞ் சிலர்.

(குச வசனம்) (தன் தாயாரைப்பார்த்து) அம்மா! எங்கள் பேரில் படையெடுத்துவந்தவர்களை தங்களால் கொடுக்கப்பட்ட அஸ்திரத்தால் கொன்று கீழே வீழ்த்தி அவர்களுடைய ஆடை ஆபரணங்கள் முதலிய முடிகளையும் கொண்டுவந்திருக்கிறோம்.

சீதையைக் கண்டு ஆஞ்சநேயர் நமஸ்காரம் செய்தல்.

[சீதை வசனம்] அப்பா! இது யாருடைய ஆபரணங்கள்? ஐயோ! எனது நாயகருடைய முடியைப்போலன்றோ தோன்றுகின்றது தெய்வமே!

பாட்டு யீசா உனக்கு கண்கள் என்ற மெட்டு

ஐய்யய்யோ இதுவென் தலைவிதியே
யாரிடம் சொல்வேனிந்த கதியே

இரகில்லா பக்ஷியைப்போலானேன்
இகத்தில் கொடியவளாய் போனேன்

நாதன் உயிரிழக்க காலம் ஐயோ
நடந்ததே இந்த அலங்கோலம்

பெற்றபிள்ளைகளாலே மோசம் வந்து
பிறந்ததே கால வித்தியாசம் (ஐ

(வசனம்) ஐயோ! நாதா தங்களுக்கு இப்பேர்ப்பட்ட விதியுமாவேற்பட்டது என்னை வனத்திற்கு அனுப்பி தாங்கள் ராஜ்யபாரம் செய்து சுகமாய் வாழ்வுபெற்று வருகிறீர்களென்றல்லோ இருந்தேன். ஐயோ! கடைசியில் தங்களுடைய குழந்தைகளின் கையில் மடியவா நேர்ந்தது இனி நான் வனத்தில் அனாதை என்னசெய்ய

முடியும் அப்பா அநுமானே! உனக்குந் தெரியாமல் நீயும் இருந்து தானு இக்காரியம் செய்ய எத்தனித்தீர்கள் ஐயோ தெய்வமே!

(உடனே வால்மீகர் வந்து)

(வால் வ-ம்) அம்மா சீதாதேவி! என் அழுகிருய்? காரணம் என்ன? நானிருக்க நீயேன் வருத்தமடையவேண்டும்?

(சீதை வ-ம்) சுவாமி! தாங்கள் பாதாள உலகஞ் சென்றபின் இச்சிறுவர்கள் வேட்டையாட சென்ருர்கள் அப்பொழுது எனது நாயகரான ராமச்சந்திரமூர்த்தி அஸ்வமேதயாகம் நிறைவேற்றி அசுவத்தை அனுப்பி யாவரும் தொடர்ந்து வந்துகொண்டிருக்க இவ்விருவரும் சண்டை செய்து யாவரையுங்கொன்று அவர்களுடைய முடிகளேயும் எடுத்துக்கொண்டு வந்திருக்கிருர்கள் ஸ்வாமி இதோ பாருங்கள் இனியென் செய்வேன்?

(வால் வ-ம்) அம்மணி ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம் வாருங்கள் அவர்களே உயிர்பெறச் செய்கிறேன்.

காக்ஷி முடிவு

யாபேரும்யுத்தகளம் போய் எல்லோரையும் எழுப்பிக் கொடுத்து விர்த்தாந்தம் விசாரித்தல்

5வது காக்ஷி இடம் யுத்தகளம்

பாத்திரங்கள்:—ராமர் முதல் சேனைகள்வரை யாவரும் சீதை முதல் வால்மீகர்வரை யாவரும் வால்மீகியால் எல்லோரும் உயிர்பெற்றெழுந்து நமஸ்காரம்.

(ராமர் வ-ம்)சுவாமி நாங்கள் மூர்ச்சையாய்இருக்கும்பொழுது எங்களே உயிர்பெறச்செய்தது நீங்கள்தானு உங்களுடைய நாமதேயம் தெரிவிக்க வேண்டும் சுவாமி

(வால் வ-ம்) ராமமூர்த்தி இதோஉன்மனைவியாகிய சீதாதேவி உன் இரண்டு குழந்தைகளாகிய குசலவனென்ற புத்திரர்கள்

(ராமர் வ-ம்) ஹா! என் கண்மணி

(சீதை வ-ம்) எனதுயிர் நாதா நமஸ்கரிக்கிறேன்

ராமர் பாட்டு பியாக்கடை ருகம் பருவரதி இவள் என்ற மெட்டு

மனது ரஞ்சித சீதா இந்த மௌன மேனடி அன்னமே
எனது காலவித்தியாசத்தா லுனே
இழந்தேன் தனே நீ எண்ணுதினிவுற (மன

சீதை ஷை தர்க்கம்

ப்ராணபதி யுமையன்றி மறு துணை
பெற்றிலேன் உலகத்தின் மேல்
த்ராணவமுடைய மூர்த்தியே உன
தாங்கும்ரவிகுல மோங்கும் கீர்த்தியே (ப்ராண

(ராமர் வ-ம்) ஜானகி விதியின் பயனை விளக்கிக் காட்டுதற்கு இந்த யுகத்தில் நம்மிருவர் ஜெனனமே காரணமாய் விளங்கும் சில காலம் நான் உன்னை விலக்கியதை நீ மனதில் நினைத்துக் கொள்ளாதே அதனை ஊழின்றுெடரென்றே கருதப்படுவாயாக இனி நமது செல்வனுக்கு ராஜ்யத்தை முடிசூட்டிவித்து நாமும் மாருத நித்ய சுகத்தை அடைந்திருப்போம் மகிழ்ந்தென்னுடன் வருவாய் மாணிக்கமே

(சீதை வ-ம்) ஸ்வாமி தேவ்ரீரதுசித்தமே அடியாளது பாக்யம் வருகிறேன்

(வால் வ-ம்) ராமச்சந்திரா கவலையொழித்தல் வேண்டும் நான் இந்த வனத்தில் வாழப்பட்ட வால்மீகிரிஷி உன் மனைவியானவள் கெர்ப்பவதியாய் இத்தக் காட்டில் கஷ்டமடையுங்கால் நான் சந்திக்கலானேன் என்னுடைய ஆச்சிரமத்திற்கு அழைத்துச்சென்று சிசுரட்சையின் நிமித்தம் இரண்டு தேவிமாரையும் நியமித்து சுகமாய் குசனென்ற சிறுவனைப்பெற்று கொஞ்சநாள் கழித்தது யான் நிஷ்டையில் யிருக்கும்பொழுது அம்மணி குழந்தையை தொட்டிலில் போட்டு ஜலமெடுக்கச் சென்றவள் நான் கண்ணை மூடி இருப்பதைத்தெரிந்து மறுபடியும் குழந்தையை தூக்கிக்கொண்டுபோய் இருக்கிருள் சற்றுநேரம் கழித்து கண்விழித்துப் பார்க்க தொட்டியில் குழந்தையைக் காணுமல் குழந்தைக்குமோசம் வந்துவிட்டது என்று நினைத்து தெர்ப்பைப்புல்லால் லவன் உற்பத்தியானன் இதோ இரண்டு மைந்தர்கள் ஒப்புக்கொள்வாய் ராமச்சந்த்ரா சேமமாய் வாழக்கடவாய்

(ராமர்) அடா செல்வர்காள்!

சுவாமி தாங்கள் தெரிவித்த விர்த்தாந்தம் யாவும்கேட்டோம் சந்தோஷம் கொண்டோம் வாருங்கள் அயோத்தியாபுரியை இவ்விருவருக்கும் பட்டாபிஷேகம் நடத்திவைக்கலாம்

காக்ஷி முடிவு

6வது காக்ஷி இடம் அயோத்தி யரண்மனை

பாத்திரங்கள்:—தேவர்கள் புஷ்பமாரி சொரிய அரம்பையர் கீதம் பாட வேத கோஷ்ட

முழங்க சர்வ ஜனங்களோடு குசலவ
னுக்கு பட்டாபிஷேகம் நடக்கிறது.

சுபம்! சுபம்! சுபம்!

மங்களம் ஜெய மங்களம் ஸ்ரீராம ராம மங்

பொங்கும் அயோத்தியில் புகழ் ராமலக்ஷ்மணருக்கும்
எங்கும் துலங்கும் பரத சத்ருக்கருக்கும் மங்

அன்னை ஜானகியார்க்கும் அருள் குசலவனுக்கும்
மண்ணும் விண்ணும் போற்றும் வால்மீகரிஷிகட்கும் மங்

தாசானு தாசனும் தாசன் ராமசாமி
சாற்றும் இச்சரிதையைக் கேட்டு மகிழ்வோர்க்கும் மங்

காக்ஷி முடிவு

சாரதா அச்சியந்திரசாலை,
அருப்புக்கோட்டை.
1932.

இந்தப்புஸ்தகமானது அநேகருடைய வேண்டுகோளுக்கிணங்கி விரைவில் வெளிவர வேண்டுமென்ற அவாவினால் சொற்பப் பிரதிகளை அச்சிடப்பட்டிருக்கிறது.

கிடைக்குமிடம்:- எம்மிடமும், அருப்புக்கோட்டை சாரதா அச்சியந்திரசாலையிலும், நேரிலும் V. P. மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம்.

வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

கூடிய சீக்கிரத்தில் "யயாதி மகாராஜன்" சரித்திரமும் நாடக ரூபமாக வெளிவருவதை எதிர்பாருங்கள்.

ஆசிரியர் A K. ராமசாமி நாயக்கர்
புளியம்பட்டி, அருப்புக்கோட்டை.
25-5-32